112

UNIVERSITY OF MADRAS

PRE-UNIVERSITY EXAMINATION

1970

PART III — ADVANCED TAMIL

SELECTIONS IN POETRY

சென்னைப் பல்கலைக் கழகம்

UNIVERSITY OF MADRAS

புகுமுக வகுப்புத் தேர்வு

PRE-UNIVERSITY EXAMINATION

1970

பகுதி III — சிறப்புத் தமிழ்

PART III — ADVANCED TAMIL

செய்யுள் திரட்டு

SELECTIONS IN POETRY

PRINTED AT

GITHA PRESS, TIRUCHIRAPALLI - 2.

Copies can be had from :

THE REGISTRAR,
UNIVERSITY OF MADRAS,
UNIVERSITY BUILDINGS,
CHEPAUK, MADRAS - 5.

77162

August, 1968 - C. 10000.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	திருக்குறள்	...	1
	குறிப்புரை	...	52
2.	மணிமேகலை	...	9
	குறிப்புரை	...	63
3.	கம்பராமாயணம்	...	17
	குறிப்புரை	...	68
4.	திருவிளையாடற்புராணம்	...	30
	குறிப்புரை	...	76
5.	பாரதியார் பாடல்	...	40
	குறிப்புரை	...	79
6.	அழகின் சிரிப்பு	...	44
	குறிப்புரை	...	80

1. திருக்குறள்

உலகத்தே அவ்வப்போது தோன்றி அறநெறி உணர்த்திச் சென்ற அறவோர் பலர். அவர்களுள்ளே மார்க ஔரேலியஸ் (Marcus Aurelius), செனிக்கா (Seneca), காண்ட்டு (Kant), கன்பூசியஸ் (Confucius) முதலியோர் தலைசிறந்த அறவோர்களாகத் துலங்கியவர்கள் ஆவர். அவர்தம் தெள்ளிய சிறந்த கருத்துக்கள் அனைத்தும் ஒரு சேரத் திரண்டு உருப்பெற்றது போல் அமைந்துள்ளதே வள்ளுவர் இயற்றிய திருக்குறளாகும்.

திருவள்ளுவர் அறங்கூறுவதோடு மட்டும் அமையாது, பொருளின் திறமும் இன்பத்தின் கூறும் இனிதுறக் கிளத்திக் கூறிய பெருமகனுர் ஆவர். பொருட்பாலில் வள்ளுவரின் அரசியல் அறிவைக் கண்டு வியக்கும் நாம் காமத்துப் பாலிலே கற்பனை நயமும் கருத்துச் செறிவும் கொண்ட அழகான பல பாடல்களைக் காணலாம்.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்றும்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்றும் திருக்குறள் பழங்காலத்திலேயே புலவர்களாற் பாராட்டப்பெறும் சிறப்பு வாய்ந்ததாகும்.

'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' (புறநானூறு: 34) என்னும் புறநானூற்றுப் பாடற் றொடர் கொண்டு 'அறம்' என்ற பெயரும் திருக்குறளுக்கு வழங்கியிருக்க வேண்டுமென்பர். திருவள்ளுவர் காலத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் வழங்கினும் 'திருவள்ளுவர் ஆண்டு' என்று ஒரு ஆண்டுக் கணக்கு முறை நிலவி வருகின்றது. கி. மு. 69

முதல் வள்ளுவர் ஆண்டு எனக் கணக்கிடப் பெறுகின்றது. மறைமலையடிகளாரும் திருவள்ளுவர் காலத்தினை, கி. மு. முதல் நூற்றாண்டென்பர்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி" என்பர். திருக்குறள் சொற்சுவை பொருட்சுவை, நகைச்சுவை, நாடகச்சுவை, உவமைச்சுவை கெழுமி மிளிர்கின்றது. இந்நூலிற்கு முப்பால், வாயுறை வாழ்த்து, தெய்வ நூல், தமிழ்மறை, பொதுமறை என்ற பெயர்களும் வழங்குகின்றன. மணக்குடவர், பரிமேலழகர், பரிதியார் முதலிய பதின்மர் இந்நூலிற்கு உரை செய்தனர் என்பர். பரிமேலழகர் உரையே உரைகளிற் சிறந்ததாகக் கொள்ளப் பெறுகின்றது.

குறள் – பண்புப் பெயர்; ஈரடி வெண்பாவிற் காகுங்கால் பண்பாகு பெயராய், அப்பாக்களாலாகிய நூலுக்காகுங்காற் கருவியாகு பெயராய், இருமடியாகு பெயராகும்.

திருக்குறள் : சேர்த்துக் கூறுங்கால் 'திரு' என்னும் அடையடுத்த ஆகு பெயராகக் கொள்ளலாம்.

அறத்துப்பால்

இஃது அறத்தினைப் பற்றிய பகுதியாகும். அறமாவது நன்மனம், நல்வினை, நன்மொழியாகிய நெறியாம். தொடர்புடையார்மாட்டுக்கொண்ட காதல் 'அன்புடைமை' என்றும், வீட்டிற்கு வந்த விருந்தினரை ஏற்று உபசரித்தல் 'விருந்தோம்பல்' என்றும், மனத்தின்கண் உவகையை விளைப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல் 'இனியவை கூறல்' என்றும், தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை 'செய்ந்நன்றியறிதல்' என்றும், பகை, நொதுமல், நண்பென்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை 'நடுவு நிலைமை' என்றும் கூறப்படும். அறத்துப் பாலின் இல்லற வியலில் வரும் இவ்வினிய பகுதிகள் இங்குப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன.

1. அன்புடைமை

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 1

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. 2

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு. 3

அன்பீனு மார்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு. 5

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை. 6

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 7

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 8

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. 9

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த துடம்பு. 10

2. விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 1

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 2

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. 3

அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். 4

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 5

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 6

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 7

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்கண் ணுண்டு. 9

மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 10

3. இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். 2

முகத்தா னமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 3

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 4

பணிவுடைய னின்சொல னாத லொருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 8

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

4. செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 1

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. 3

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 4

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 6

எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 8

கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

5. நடுவுநிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 1

செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. 2

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். 3

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். 4

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 5

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். 6

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 8

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின். 9

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 10

———

2. மணிமேகலை

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழில் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்பெறும். சிலப்பதிகாரக் கதையுடன் மணிமேகலைக் கதை தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினால் இவ்வாறு வழங்குவர். 'மணிமேகலை துறவு' என்றும் இந்நூல் வழங்கும். வீரச்செல்வியாகக் கண்ணகி விளங்க, அன்புச் செல்வியாக மாதவி விளங்க, அறச் செல்வியாக மணிமேகலை ஒளிவிடுகின்றாள். மணிமேகலையின் துறவு, அருளொடு பிறந்த பற்றற்ற ஞானத்துறவாகும். தொடர்புடையார்மாட்டுத் தோன்றுவது அன்பு. தொடர்பில்லார்மாட்டுத் தோன்றிச் சுரப்பதே அருள் என வழங்கும். அருள் பற்றிய துறவே மணிமேகலையின் மாண்பு மிக்க துறவு என்பது இக்காப்பியத்தின் வழி நன்கு புலனாதல் காணலாம்.

இல்லறத்தின் ஏற்றத்தினை உலகிற்கு உணர்த்திய நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் எழுந்த பெருங்காப்பியம் மணிமேகலையாகும். அருளறமே மணிமேகலையின் அடிப்படையாகும். முடியுடை மன்னர்களைச் சார்ந்தே உலகக் காப்பியங்களெல்லாம் முகிழ்த்திருக்க எளிய வணிகனொருவனைத் தலைவனாகக் கொண்டது சிலம்பு. அவ்வணிகனுக்குக் கணிகையிடத்துப் பிறந்த அவன் புதல்வியைத் தலைவியாகக் கொண்டது மணிமேகலை. இளங்கோவடிகள்,

'மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து'

ஆயினள் என்று கண்ணகியைக் கூறியிருக்க,

'தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றனள்'

என்று மணிமேகலையைப் பற்றி மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கூறுவர்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன இப்பெருங் காப்பியத்தினை இயற்றிய சாத்தனரே இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் இயற்றத் தூண்டினர் என்பது சிலம்பின் பதிகம் வழங்கும் செய்தியாகும். இளங்கோவடிகளால் சாத்தனர், 'தண்டமிழாசான் சாத்தன்' என்றும், 'நன்னூற் புலவன்' என்றும் பாராட்டப் பெறுகின்ருர். புத்த தருமத் தினையும் கொள்கைகளையும் பரப்புவதனையே நோக்கமாகக் கொண்டு சாத்தனர் தம் காப்பியத்தை எழுதியிருப்பினும், இவர்தம் நூலில் அருங்கலையுணர்வினையும், மக்கள் ஒழுகலாறு களையும், இயற்கைப் புனைவுகளையும் நிரல்படக் காணலாம். பல்வகைக் காட்சிகளை இவர் சித்திரிக்குந்திறம் நம் மனக் கண்ணெதிரில் காணும் ஓவியக் காட்சியாக அமைதல் கண்கூடு.

மதுரையில் கூலவாணிகம் நிகழ்த்திய சாத்தனர் இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தவர் என்பர். எனவே இவருடைய காலம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு என்னும் கருத்து நிலவுகின்றது.

தமிழன்னையின் அணிகலன்கள் பலவுளவாயினும் இம் மணிமேகலை குறையாக் கருத்துவளத்துடன் – தண்டாத சிறப்புடன் தமிழ்த் தாய்க்கு அணிசெய்யும் தகுதிசான்ற ஓர் அருமையான அணியாகத் திகழ்கின்றது.

ஆதிரை பிச்சையிட்ட காதை

காய சண்டிகை மணிமேகலையிடம் ஆதிரையின் கற்பு விசேடத்தினைக் கூறுகின்ருள்: பரத்தையொழுக்கத்தால் கைப்பொருளிழந்து வறுமையுற்ற ஆதிரையின் கணவன் சாதுவன் சில வணிகரோடு கப்பலேறிச் சென்று கலங் கவிழவே, ஒடிந்து விழுந்த பாய்மரத் துண்டமொன்றைப் பற்றி நீந்திச்சென்று நாகர் வாழும் மலைப்பக்கத்தை நண்ணு கின்ருன். கலங்கவிழ்ந்த செய்தியினைப் பிழைத்து வந்த வணிகர் சொல்லக் கேட்ட ஆதிரை தீயை மூட்டித் தீப்பாய முனைகிருள். தீ சுடாத நிலையில் வருந்துகின்ருள். அந்நிலை யில் ஆகாயவாணி, அவள் கணவன் உயிருடன் இருப்பதாக வும், விரைவில் இல்லம் திரும்புவானென்றும் அறிவிக்கின்றது.

நாகர் மலையையடைந்த சாதுவன் நாகர்களால் துன்ப மிழைக்கப்படும்பொழுது, அவர்கள் மொழியிலேயே பேசி, அவர்தம் புலாலொழுக்கத்தின் புன்மையினைக் கடிந்து கூறித் திருத்துகின்றான். அவர்கள் மனங்கொள அறவுரைகள் பலவற்றையும் பொருந்தக்கூறி, அவர்களை நல்வழிப்படுத்தி விட்டுப் பல பரிசில்கள் பெற்று அங்கிருந்தும் போந்து தன் ஊரடைகின்றான். பின்னர் தன் மனைவி ஆதிரையோடு அகமகிழ்ந்து வாழ்ந்து பல்வகைத் தருமங்களையும் ஆற்றி வந்தனன். அவன் மனைவி ஆதிரையின் கையால் முதலிற் பிச்சை பெறுக என்று காய சண்டிகை விளங்கச் சொல்ல மணிமேகலை அவளுடைய மனையிற் புகுந்து வாய் பேசாமற் சித்திரம்போல நின்றாள். நின்றவுடன், "பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென அமுத சுரபியி னகன் சுரை நிறைதர ஆதிரை யிட்டன ளாருயிர் மருந்து." இவ்வாறு ஆதிரை பிச்சையிட்ட காதை முடிவுறுகின்றது.

இப்பகுதியில் நல்ல அறவுரைகள் பல விளங்க உரைக்கப் படுகின்றன.

மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை

ஆதிரையின் வரலாறு

ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை யுரைப்போள்
ஆதிரை கணவ னாயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில னாகி
அணியிழை தன்னை யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்

கலம் கவிழல்

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
ஓடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்

ஆதிரை தீப்பாய்தல்

நாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் றன்னோ டுயிருயப் போந்தோர்
இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் றானுஞ் சாவுற் றானென
ஆதிரை நல்லா ளாங்கது தான்கேட்

ஊரீ ரேயோ வொள்ளழ லீமம்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்

தீ சுடாதிருத்தல்

படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையு மொள்ளெரி யுரூஅ
தாடிய சாந்தமு மசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே னென்றவ ளேங்கலும்

வானின்றும் ஒலித்த செய்தி

ஆதிரை கேளுன் னரும்பெறற் கணவனை
ஊர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் றோன்றும்
நின்பெருந் துன்ப மொழிவாய் நீயென
அந்தரந் தோன்றி யசரீரி யறைதலும்

ஆதிரையின் கற்பின் பெற்றி

ஐயரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தருஉம்

சாதுவனின் பிறமொழிப் புலமையும் பயனும்

அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயினள்

ஆங்கவள் கணவனு மலைநீ ரடைகரை
ஓங்குயர் பிறங்க லொருமர நீழல்
மஞ்சுடை மால்கட லுழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
தானே தமியன் வந்தன னளியன்
ஊனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலும்
மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
ஆங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளாய்
ஈங்கெங் குருமக னிருந்தோ னவன்பாற்
போத்தரு ணீயென வவருடன் போகிக்

குருமகன் தோற்றம்

கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழற் குளிர்ந்த பின்னவன்
ஈங்குநீ வந்த காரண மென்னென
ஆங்கவற் கலைகட லுற்றதை யுரைத்தலும்
அருந்துத லின்றி யலைகட லுழந்தோன்

குருமகனின் விருந்தைச் சாதுவன் மறுத்தல்

வருந்தின னளியன் வம்மின் மாக்காள்
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென
அவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்
பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்
குண்டோ ஞாலத் துறுபய னுண்டெனிற்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்

சாதுவன் மெய்ந்நெறி கிளத்தல்

மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும்
உண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி

குருமகன் திருந்துதல்

உடம்புவிட் டோடு முயிருருக் கொண்டோர்
இடம்புகு மென்றே யெமக்கீங் குரைத்தாய்
அவ்வுயி ரெவ்வணம் போய்ப்புகு மவ்வகை
செவ்வன முரையெனச் சினவா திதுகேள்
உற்றதை யுணரு முடலுயிர் வாழ்வுழி
மற்றைய வுடம்பே மன்னுயிர் நீங்கிடிற்
றடிந்தெரி யூட்டினுந் தானுண ராதெனின்
உடம்பிடைப் போனதொன் றுண்டென வுணர்நீ

பிறவியின் தன்மை

போனார் தமக்கோர் புக்கிலுண் டென்ப
தியானோ வல்லே னியாவரு முணர்குவர்
உடம்பீண் டொழிய வுயிர்பல காவதம்
கடந்துசேட் சேறல் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ

குருமகன் பணிவு

என்றவ னுரைத்தலு மெரிவிழி நாகனும்
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளு மூனும் கைவிடி னிவ்வுடம்
புள்ளுறை வாழுயி ரோம்புத லாற்றேன்
தமக்கொழி மரபிற் சாவுறு காறும்
எமக்கா நல்லற மெடுத்துரை யென்றலும்

சாதுவன் சாற்றிய அறவுரை

நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்றனக் கொல்லு நெறியற முரைக்கேன்
உடைகல மாக்க ளுயிருய்ந் தீங்குறின்
அடுதொழி லொழிந்தவ ராருயி ரோம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திற மொழிகெனச் சிறுமக னுரைப்போன்

சாதுவன் ஊர் திரும்புதல்

ஈங்கெமக் காகு மிவ்வறஞ் செய்கேம்
ஆங்குனக் காகு மரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
உண்டே மவர்த முறுபொரு ளீங்கிவை
விரைமர மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென வெடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்த னென்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துட னேறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமுஞ் செய்தனன்

ஆதிரையிட்ட பிச்சை

ஆங்கன மாகிய வாதிரை கையாற்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா வோவியம் போல நிற்றலும்
தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்
பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டன ளாருயிர் மருந்தென்.

3. கம்பராமாயணம்

உலகப் பெருங்காப்பியங்களுள் கம்பராமாயணம் ஒன்று. ஆதிகாவியம் என்னும் வான்மீகராமாயணத்தைத் தமக்கு முதல் நூலாகக் கொண்டு இப்பெருங்காப்பியத்தைக் கம்பர் இயற்றியது உண்மையே ஆயினும், ஆதிகாவியமாகிய முதனூலுக்கும் கம்பரது வழி நூலாகிய இராமாயணத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பலவாம்.

கம்பரின் பெருமையினை உணர்த்தும் பழமொழிகள் பல; அவற்றுள், 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியுங் கவிபாடும்' என்பது ஒன்று.

தம்மை இளமை முதல் பேணி வளர்த்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைத் தமது இராமாயணத்திலே ஆயிரம் பாட்டுக்கு ஒன்ருகப் பத்து இடங்களிலே வைத்துப் பாடிய கம்பர், முடிவிலே திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலாரின் மரபினுக்குரிய வேளாண்குலப் பெரியார் எடுத்துக் கொடுக்க அதனைக் கையிலே வாங்கி "வசிட்டனே புனைந்தான் மௌலி" என இராமனது முடி சூட்டு விழாவிற்கொரு மணிமுடி போன்றவிடத்தே காட்டும் செய்ந்நன்றி மறவாமை போற்றத்தக்கதாகும்.

கம்பர் வடநூலுந் தமிழ் நூலும் ஐயந்திரிபறக் கற்ற தோடமையாது தாம் கற்றவற்றின் பிழிவெல்லாம் திரட்டி ஓர் அழகிய காவியமாக்கித் தந்துள்ளார். அதனை இவர் படைத்த மாந்தர்களாங் கூனி வழியும், வாலி வழியும், குகன் வழியும், கைகேயி வழியும், கும்பகருணன் வழியுமே காணலாம். இராமனும் பாட்டுடைத் தலைவன்தன் திருவாயினலேயே,

"யார்கொல்இச் சொல்லின் செல்வன்?"

எனச் சுட்டிக் காட்டப்பெற்ற அனுமனது வழிபற்றியும் நன்கு அறியலாம்.

கம்பரது சமயப் பொது நோக்கினை,

'அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கு
பரகதிசென் றடைவரிய பரிசு' [மறிவிலார்க்குப்

என்னும் அடிகள் தெளிவாக எடுத்து இயம்புகின்றன.

கம்பரது காலம் கி. பி. 1185; இதனை உண்மையென அறுதியிட 'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின் மேல்' என்னும் வேளூர் ஆத்துமநாத தேசிகர் இயற்றிய சோழ மண்டல சதகக் கூற்றுத் துணை செய்கின்றது. சகாப்தம் என்பது 'சாலிவாகன சகாப்தம்' ஆகும். அதன் தொடக்கம் கி. பி. 78. எண்—ஆயிரம். எண் + நூறு; ஆயிரத்து நூறு; எண்ணூற்றேழு ஆயிரத்து நூற்றியேழு ஆகும். இதனுடன் 78 ஆண்டுகளைக் கூட்டினால் கி. பி. 1185 ஆகும். இதனை சிலர் நேர் பொருளாகக் கொண்டு 807 + 78 = கி. பி. 885 என்பர்.

கம்பர் சோணாட்டிலே தேரழுந்தூர் என்னுந் திருவழுந் தூரிலே வேளாண் மரபிலே உவச்சர் குலத்திலே ஆதித்தன் என்பவர் மைந்தனாகத் தோன்றியவர். சோழன் இவருக்குப் பரிசாகக் கொடுத்த நிலம் கம்பநாடு என வழங்கலாயிற்று. ஆதலின், இவரைக் கம்ப நாடன், கம்ப நாட்டாழ்வார் என்பர். சோழனது விருப்பத்தைச் சடையப்ப வள்ளல் உணர்த்த, அதன்வழி இவர் இராமாயணத்தை இயற்றினார் என்பர். இவர்தம் விருத்தப் பாக்களிலே காணப்பெறும் சுவை தனிச்சிறப்பு உடையது. 'விருத்தமெனும் ஒண்பா வில் உயர்கம்பன்' எனப்போற்றப்படுவது பொருந்துவதே.

கம்பராமாயணம்: கபிலரகவல் என்பதைப்போல ஆறும் வேற்றுமைத் தொகையாம். இனிக் கம்பரால் இயற்றப் பெற்ற இராமாயணம் எனின் மூன்றும் வேற்றுமைத் தொகையுமாம்.

கம்பர் தமது இராமாயணத்தை, பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு பகுதி களாகப் பிரித்துப் பாடியுள்ளார். அவற்றுள் யுத்த காண்டம் மிகப்பெரியது. அயோத்தியா காண்டம் என்பது, தயரதன் இராமனுக்கு முடிசூட்ட நினைக்கும் வகையினையும், பின்

கைகேயி தன் வரத்தால் முடிசூட்டு விழா தடைப்பட இராமன் காட்டுக்குச் செல்வதையும், பாட்டியார் வீடு சென்றிருந்த பரதன் அயோத்தி வந்து எல்லாவற்றையும் அறிந்து தானும் காடு சென்று இராமனது பாதுகையைப் பெற்று நந்தியம்பதி யில் பாதுகைக்கு முடிசூட்டிச் செங்கோல் நடத்துவதையும் கூறுவது.

அதனுள், இங்கு அமைந்துள்ளது கைகேயி சூழ்வினைப் படலம்; மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறிய கைகேயி தசரதனிடம் இரண்டு வரம் கேட்டலும், அதனல் தசரதன் கலக்கமும் சினமும் உற்று வருந்தலும், பின்னர் வரம் தந்து துயருறுதலும், கைகேயி தான் பெற்ற வரத்தை இராமனிடம் அறிவித்தலும் பற்றிக் கூறுவதாகும்.

அயோத்தியா காண்டம்

கைகேயி சூழ்வினைப் படலம்

கைகேயியின் துயரக்கோலம்

1. அடைந்தவ ணேக்கிய ரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்த தெனத்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை மானையெ டுக்கு மானை யேபோற்
றடங்கைகள் கொண்டுத ழீஇயெ டுக்க லுற்ருன்.

2. நின்றுதொ டர்ந்தநெ டுங்கை தம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தா
ளொன்றுமி யம்பல ணீடு யிர்க்க லுற்ருண்
மன்றல ருந்தொடை மன்ன ஞவி யன்னுள்.

நிகழ்ந்ததைக் கூறுமாறு தசரதன் கைகேயியைக் கேட்டல்

3. அன்னது கண்டவ லங்கன் மன்ன னஞ்சி
யென்னைநி கழ்ந்ததிஞ் ஞால மேழில் வாழ்வா
ருன்னையி கழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாஞ்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி டென்ருன்.

4. கள்ளவிழ் கோதைக ருத்து ணர்ந்த மன்னன்
வெள்ளநெ டுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கா
னுள்ளமு வந்தது செய்வ ஞென்று முலோபேன்
வள்ளலி ராமனுன் மைந்த ஞணை யென்ருன்.

கைகேயி வரங்கள் கேட்டல்

5. ஆன்றவ னவ்வுரை கூற வன்ன மன்னு
டோன்றிய பேரவ லந்து டைத்த லுண்டேற்
சான்றிமை யோர்குல மாக மன்ன நீயன்
றேன்றவ ரங்களி ரண்டு மீதி யென்ருள்.

6. வரங்கொள வித்துணை மம்ம ரல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தில்லை யீவ னென்பாற்
பரங்கெட விப்பொழு தேப கர்ந்தி டென்ரு
னுரங்கொண்ம னத்தவள் வஞ்ச மோர்கி லாதான்.

7. எயவ ரங்களி ரண்டி ஞென்றி ஞலென்
சேயுல காள்வது சீதை கேள்வ ஞென்ருற்
போய்வன மாள்வதெ னப்பு கன்று நின்ரு
டயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள்.

தசரதன் வருத்தம்

8. நாகமெ னுங்கொடி யாட ஞவின் வந்த
சோகவி டந்தொடரத்து ணுக்க மெய்தா
வாகம டங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேகம டங்கிய வேழ மென்ன வீழ்ந்தான்.

9. பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்ல
னூதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான்.

10. உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள்பொ டித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்
றலந்தலை யுற்றவ ரும்பு லன்க ளைந்தும்.

11. மேவிநி லத்திலி ருக்கும் விம்மும் வீழு
மோவிய மொப்பவு யிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற வெண்ணு
மாவிப தைப்ப வலக்க ணெய்தி நின்ருன்.

12. பெண்ணென வுற்றபெ ரும்ப ழிக்கு நாணு
முண்ணிறை வெப்பொடு யிர்த்து யிர்த்து லாவுங்
கண்ணில ஞெப்பவ யர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்கவு ழைக்கு மானை போல்வான்.

யாவரும் நிலைகலங்கக் கைகேயி மட்டும் வன்னெஞ்சளா யிருத்தல்

13. கம்பநெ டுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பிவி ழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர்ந டுங்கின ரூழி பேர்வ தொத்த
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தேயால்.

14. அஞ்சல வீயன தல்லல் கண்டு முள்ள
நஞ்சில ணுணில வென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டும டந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர்.

மனம் மாறுபடக் காரணம் யாதெனக் கைகேயியைத்
தசரதன் வினுதல்

15. இந்நிலை நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதி சைத்த துண்டோ
பொய்நிலை யோர்கள்பு ணர்த்த வஞ்ச முண்டோ
வந்நிலை சொல்லென தானை யுண்மை யென்றான்.

'வரந்தர மறுப்பின் மாண்டு போவேன்' எனக் கைகேயி கூறுதல்

16. திசைத்தது மில்லையெ னக்கு வந்து தீயோ
ரிசைத்தது மில்லைமு னீந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வ னன்றேல்
வசைத்திறன் நின்வயி னிற்க மாள்வெ னென்றாள்.

கைகேயியின் கடுமொழிகேட்ட தசரதன் திகைப்பும் சோர்வும்

17. இந்தநெ டுஞ்சொலவ் வேழை கூறு முன்னே
வெந்தகொ டும்புணில் வேனு ழைந்த தொப்பச்
சிந்தைதி ரிந்துதி கைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்தன லாதுயிர் வேறி லாத மன்னன்.

18. ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
வோகொடி தேயற மென்னு முண்மை யொன்றுஞ்
சாகவெ னுவெழு மெய்த ளாடி வீழு
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்.

19. நாரிய ரில்லையிஞ் ஞால மெங்கு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம்வி ழுங்கி நின்ற வேலான்.

20. கையொடு கைகள்பு டைக்கும் வாய்க டிக்கு
மெய்யுரை குற்றமெ னப்பு ழுங்கி விம்மு
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்றுந டந்த வாய்மை மன்னன்.

கைகேயி காலில் தசரதன் விழுந்து வருந்தி வேண்டுதல்

21. ஒறுப்பினு மந்தர முண்மை யொன்று மோவா
விருப்பினு மந்தர மென்று வாய்மை மன்னன்
பொறுப்பினு மந்நிலே போகி லாளே வாளா
விருப்பினு மாவதி ரப்ப தென்றெ ழுந்தான்.

22. கோன்மேற் கொண்டுங் குற்ற மகற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனி னன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக்களி மன்னர்
மேன்மேல் வந்து முந்திவ ணங்கி மிடைதாளான்.

23. கொள்ளா னின்சே யிவ்வர சன்னன் கொண்டாலு
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்று
முள்ளா ரெல்லா மோதவு வக்கும் புகழ்கொள்ளா
யெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்ருன்.

24. வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றெ
னேனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வா
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்ருன்.

25. கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
னுண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றே
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்ருன்.

26. வாய்தந் தேனென் றேனினி யானே, வதுமாற்றே
னேய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னையி ரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ.

கைகேயி இரங்காது தசரதனை இழித்துக் கூறல்

27. இன்னே யின்னே பன்னியி ரந்தா னிகல்வேந்தன்
றன்னே ரில்லாத் தீயவ னுள்ளந் தடுமாருண்
முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயே
லென்னே மன்ன யாருளர் வாய்மைக் கினியென்ருள்.

தசரதன் 'இராமனை மட்டும் நாடு இறவாமை நய' எனக் கைகேயியை வேண்டுதல்

28. அச்சொற் கேளா வாவிபு ழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றோ வெனநாணு
முச்சற் றார்போற் பின்னுமி ரந்தே மொழிகின்றான்.

29. நின்மக னாள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லா
முன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றே
னென்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கு
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்றான்.

30. மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னுவுமு லர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானே
லுய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

தந்த வரத்தைத் தவிருமாறு கூறுதல் அறமாமோ எனக் கைகேயி உரைத்தல்

31. இறந்தான் சொல்லு மின்னுரை கொள்ளாள்
[முனிவெஞ்சாள்
மரந்தா னென்னு நெஞ்சின ணுள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்தவ ரத்தைத் தவிர்கென்ற
லுரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள்.

தசரதன் மண்ணில் விழுந்து வருந்திப் புரளுதல்

32. கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வம்பரன் மொய்கா னிடைமெய்யே
நெடியோ னீங்க நீங்குமென் னாவி யினியென்னா
விடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடை
[வீழ்ந்தான்.

33. வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னாழா வக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தா டுன்பஞ் சொற்கொடி யாள்சொற்
[கொடுநெஞ்சம்
போழ்ந்தா னுள்ளப் புன்மையை நோக்கிப்
[புரள்கின்றான்.

தசரதன் கைகேயியைப் பழித்துரைத்துத் துயர்கூர்தல்

34. ஒன்ரு நின்ற வாருயி ரோடு முயிர்கேள்வர்
பொன்ரு முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லா
லின்ரேர் காறு மெல்வளே யார்தம் மிறையோரைக்
கொன்ரு ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியாளே.

35. ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணு
யாவென் பாயோ வல்லேம னத்தா லருள்கொன்ருய்
நாவம் பாலென் னுருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்ருய்.

36. ஏண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரே
யாண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

37. மண்ணுள் கின்ரு ராகிவ லத்தான் மதியால்வைத்
தெண்ணு நின்ருர் யாரையு மெல்லா விகலாலும்
விண்ணேர் காறும் வென்றவெ னக்கோர் மனேவாழும்
பெண்ணுல் வந்த தந்தர மென்னப் பெறுவேனே.

38 என்றென் றுன்னும் பன்னியு யிர்க்கு மிடர்தோயு
மொன்ருென் ருெவ்வா வின்னலு ழக்கு முயிருண்டோ
வின்றென் றென்னும் வண்ணம யங்கு மிடியும் பொற்
குன்ருென் ருென்ரே டொன்றிய தென்னக்
[குவிதோளான்.

வரத்தை வற்புறுத்திக் கைகேயி கூறுதல்

39. ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்ருேள் முற்றும டங்கப் புரள்போழ்தி
லூழிற் பெற்ரு லென்னுரை யின்றே லுயிர்மாய்வேன்
பாழிப் பொற்ருர் மன்னவ வென்ருள் பசையற்ருள்.

40 அரிந்தான் முன்னேர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மைவ ளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னு மென்றனள் பாயுங் கனலேபோ
லெரிந்தா ருதே யின்னுயி ருண்ணு மெரியன்னுள்.

தசரதன் வெறுப்புற்று 'வரந் தந்தேன்' எனக் கூறல்

41. வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்ளு மிடல்வேந்த
னீந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுலகாள் வென்வசைவெள்ள
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடும் நெடிதென்ருன்.

தசரதன் மூர்ச்சையும் கைகேயி துயிலும்

42. கூரு முன்னங் கூறுப டுக்குங் கொலைவாளி
னேரு மென்னும் வன்றுய ராகத் திடைமூழ்கித்
தேரு ளுகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
யூரு நின்ற சிந்தையி னுளுந் துயில்வுற்ருள்.

இரவு முதலியவற்றைப் புனைந்துரைத்தல்

43. சேணு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன
[செய்துபி
னேணு லாவிய தோளி னுனிட ரெய்த வொன்றுமி
[ரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்மு
[னிற்கவு
நாணி னுளென வேகி னுணளிர் கங்கு லாகிய
[நங்கையே.

44. எண்ட ருங்கடை சென்ற யாமமி யம்புகின்றன
[வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்ம யங்கி விம்மிய
[வாறெலாங்
கண்டு நெஞ்சுக லங்கி யஞ்சிறை யான காமர்து
[ணைக்கரங்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றிவி ளிப்ப போன்றன
[கோழியே.

45. தோய்க யத்தும ரத்து மென்சிறை துள்ளி மீதெழு
[புள்ளெலாம்
தேய்கை யொத்தம ருங்குன் மாதர்சி லம்பி னின்றுசி
[லம்புவ
கேகயத்தர சன்ப யந்தவி டத்தை யின்னதோர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்தும னத்துள் வைவன
[போன்றவே.

46. சேம மென்பன பற்றி யன்புதி ருந்த வின்றுயில்
[செய்தபின்
வாம மேகலை மங்கை யோடுவ னத்துள் யாரும றக்கிலா
நாம நம்பிந டக்கு மென்றுந டுங்கு கின்றம னத்தவா
யாமு மிம்மணி றத்து மென்பன போலெ ழுந்தன
[யானையே.

47. சிரித்த பங்கய மொத்த செங்கணி ராம னைத்திரு
[மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி
[தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகியிடம் மண்ண னைத்துநி
[ழற்றமேல்
விரித்த பந்தர்பி ரித்த தாமென மீனெ ளித்தன
[வானமே.

48. சாய டங்கந லங்க லந்துத யங்கு தன்குல நன்மையும்
போய டங்கநெ டுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ்
[சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய
[நங்கைமார்
வாய டங்கின வென்ன வந்துகு விந்த வண்குமு
[தங்களே.

49. வைய மேழுமொ ரேழு மாருயி ரோடு கூடவ ழுங்குமம்
மெய்யன் வீரருள் வீரன் மாமகன் மேல்வி
[னைத்ததோர் காதலா
னைய நையந லம்பு லன்கள விந்த டங்கிந டுங்குவான்
றெய்வ மேனிப டைத்த சேயொளி போன்ம ழுங்கின
[தீபமே.

50. வங்கி யப்பல தேன்வி ளம்பின வாணிமுந்தின
[பாணியின்
பங்கி யம்பர மெங்கும் விம்மின பம்பை பம்பின
[பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள்
[புலம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீதநி ரம்பவே,

51. தூப முற்றிய காரி ருட்பகை துள்ளி யோடிட
[வுள்ளெழுந்
தீப முற்றவு நீர்த்த கன்றெனச் சேய தாருயிர்
[தேய்தலாற்
பாப முற்றிய் பேதை செய்தப கைத்தி றத்தினில்
[வெய்யவன்
கோப முற்றிமிகச்சி வந்தன னைத்த னன்குணக்
[குன்றிலே.

இராமன் கைகேயியின் அரண்மனையிற் புகுதல்

52. வேத்தவை முனிவ ரோடு விருப்பொடு களிக்கு
[மெய்ம்மை
யேத்தவை யிசைக்குஞ் செம்பொன் மண்டப மினிதி
[னெய்தா
னேத்தவை யுலகத்தெங்கு முள்ளவை யுணர்ந்தா
[ருள்ளம்
பூத்தவை வடிவை யொப்பான் சிற்றவை கோயில்
[புக்கான்.

53. புக்கவன் றன்னை நோக்கிப் புரவலர் முனிவர் யாருந்
தக்கதே நினைந்தான் றாதை தாமரைச் சரணஞ் சூடித்
திக்கினி னிமிர்ந்த கோலச்செங்கதிர்ச் செல்வனேய்ந்த
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூடுதல் விழுமி தென்றார்.

கைகேயி இராமனிடம் தன் வரத்தைச் சொல்லல்

54. ஆயன நிகழும் வேலை யண்ணலு மயர்ந்து தேறாத்
தூயவ னிருந்த சூழ றுருவினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா னுனிது பகர்வ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள்
[வந்தாள்.

55. நின்றவன் றன்னை நோக்கி யிரும்பினா னியன்ற
[நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரின்றிக்
[கொடுமை பூண்டா
னின்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னி லாகு
மொன்றுனக் குந்தை மைந்த வுரைப்பதோ ருரையுண்
[டென்றாள்.

56. எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னுயவருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயுநீரே தலைநின்றேன் பணிமினென்றான்.

57. ஆழிசூ ழுலக மெல்லாம பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
யேழிரண் டாண்டின் வாவென் றேவின
[னரச னென்றாள்.

58. இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாருஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கி
னொப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
வப்பொழு தலர்ந்தசெந்தா மரையினை வென்ற தம்மா.

59. தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
யிருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து நின்றா
னுருளுடைச் சகடம் பூண்ட வுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த
[தொத்தான்.

இராமன் கைகேயியிடம் விடை பெறுதல்

60. மன்னவன் பணியன் றாகி னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ
வென்னிதி னுறுதி யப்பா லிப்பணி தலைமேற்
[கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங்
[கொண்டேன்.

4. திருவிளையாடற் புராணம்

இந்நூல் மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்க லிங்கப் பெருமான் உயிர்களெல்லாம் உய்யும் பொருட்டு நிகழ்த்தியருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் உணர்த்தும் தமிழ் நூலாம்.

மதுரை மாநகர், தமிழகத்தின் செந்தமிழ் நாடாம் பாண்டிய நாட்டில் படைப்புக் காலந்தொட்டு மேன்மை பெற்று விளங்கிய பாண்டிய மன்னர் அரசு வீற்றிருந்த தலைநகரமாகும்; நல்லிசைப் புலவர் பலரும் நெடுங்காலம் சங்கமமர்ந்து தமிழ் மொழியை ஆராய்வதற்கு நிலைக்களமாய் அமைந்ததுமாகும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய பரிபாடலிலுள்ள எழுபது செய்யுட்களிலே தனக்கென்றும் வையைக்கென்றும் பல செய்யுட்களைக் கொண்டது; மற்றும் எண்ணிறந்த சான்ருேர்களாற் பாராட்டப் பெற்றது; தேவாரப் பாடல் பெற்றது.

சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடல்களை மட்டிலுமே முதற்பொருளாகவுங் கருப்பொருளாகவும் உரிப் பொருளாகவுங் கொண்டமைந்த நூல்கள் சிலவுள. அவைதாம்:

1. பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். இதுவே வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கப்பெறும்.

2. தொண்டை நாட்டு இலம்பூர் வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவன புராணம்.

3. தொண்டை நாட்டு வாயற்பதி அனதாரியப்பன் இயற்றிய சுந்தர பாண்டியம்.

4. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம்.

இவற்றுள் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் நூலும் பரஞ்சோதி முனிவரின் புராணமும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் நன்கு உரைப்பன. இவற்றுள் பின்னது முன்னதைவிட ஏறக்குறைய இருமடங்கு விரிவுடையது. இவ்விரு நூல்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் பல. கதை மாறுபாடுகளு முள.

பரஞ்சோதி முனிவரது நூலுக்கு முதல் நூல் வடமொழியிலுள்ள ஆலாசிய மான்மியம் எனவும், அது பதினெண் புராணங்களுள் ஒன்ருகிய காந்த புராணத்தின் ஒரு பகுதியாம் எனவும் கூறுப. இந்நூலிற் கூறப்பெறும் திருவிளையாடல்களெல்லாஞ் செந்தமிழ்ப் பாண்டிய நாட்டிலே தமிழ் மக்களிடையே தமிழ் மொழியாற் பேசியும் எழுதியும் நிகழ்த்திப் போந்தவாதலின், இவ்வரலாறுகள் வடமொழியில் எழுதப்படுமுன்பே தமிழின் இருவகை வழக்கிலும் பயின்றன என்றும், இவற்றை வடநூற் புலவர் தம் மொழியில் எழுதுங்கால் தமிழ் வழக்குகளை நன்கு அறியாமை முதலிய காரணங்களால் சில பிறழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் இயல்பென்றும் உணர வேண்டும் என்பர் உயர் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

காலம்: பரஞ்சோதி முனிவர் கிட்டத்தட்ட 300 ஆண்டுகட்கு முன்பே தோன்றியவர்.

ஊர்: சோழ மண்டலத்தேயுள்ள திருமறைக்காடு.

மரபு: அபிடேகத்தர் மரபிலே வழிவழிச் சைவராகத் திகழ்ந்த மீனாட்சி சுந்தர தேசிகருக்கு மைந்தராகத் தோன்றினர்.

தமிழிலும் வடமொழியிலுமுள்ள பல அரிய நூல்களைக் கற்றுத்துறைபோயபின் சிவப்பதிகள் பலவற்றைக் கண்டு மகிழ்தற் பொருட்டுத் திருப்பதிகள் பலவுங் கடந்து மதுரையம்பதி யடைந்து அங்கயற் கண்ணியம்மையின் அன்பு வலையிற்பட்டுப் பன்னாட்கள் இடையருது கோயில் வழிபாடு நிகழ்த்திவருங்கால் ஒரு நாள் இவரது கனவிலே உமையம்மையார் தோன்றி,

"எம்பெருமான் திருவிளையாடல்களைப் பாடுவாய்"

என்று பணித்தருள, அவ்வாறே அப்பணி மேற்கொண்டு இனிமையாக முடித்துச் சொக்கேசர் திருமுன்னே அறுகாற் பீடத்திருந்து அடியவரும் புலவர்களும் கூடிய பேரவையில் இதனை அரங்கேற்றினர் என்பர்.

இவரியற்றிய வேறு நூல்கள் வேதாரணிய புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி என்பன.

இவர் கடைச் சங்க நூல்களிலும் வடமொழியிலும் நல்ல பயிற்சியுடையவர். மெய்கண்ட நூற்பயிற்சியும் உடையவர். இவர் ஒன்பான் சுவையும் விஞ்சப் பெருமித நடையுடன் விரைவும் தெளிவும் கொண்டு செல்லும் செய்யுளியற்றுந் திறமுடையவர்.

இந்நூலின் சிறப்பு யாதெனில், மற்றுமுள்ள சமய நூல்களெல்லாம் மக்களாய், அவருள்ளும் ஆடவராய்ப் பிறந்தார்க்கே இறையின்பங் கிட்டுமெனச் சொல்ல, இம் முனிவர் தம் நூலிலே பன்றி, நாரை, கரிக்குருவி ஆகிய புள்ளினங்களும் கூட இறைவனடியெய்தி உய்தி பெறுதல் கூடுமென்று விளக்கிக்காட்டுதலாகும்.

திருவிளையாடற் புராணம் என்பது திருவிளையாடலைப் பற்றிய புராணம் என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாம்.

இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திரு வாலவாய்க்காண்டம் என மூன்று காண்டங்களையுடையது. அவற்றுள் மதுரைக் காண்டத்துப் பதினெட்டுப் படலங்களும், கூடற்காண்டத்து முப்பது படலங்களும், திருவாலவாய்க் காண்டத்துப் பதினறு படலங்களுமாக அறுபத்து நான்கு படலங்களும் முடிவில் அருச்சனைப் படலமும் அடங்கியுள.

அவற்றுள் இப்பாடப்பகுதி திருவாலவாய்க் காண்டத்துள் அமைந்தது. தருமி என்னும் ஏழை அந்தணனுக்காக இறைவன் பாட்டு ஒன்று எழுதித் தந்ததும், நக்கீரர் குற்றம் கூறியதால் அப்பாட்டுக்குப் பொற்கிழி கிடைக்காததும், நக்கீரர் இறைவனை எதிர்த்துச் சாபம் பெற்றதும் ஆகிய வற்றை இது கூறுகின்றது.

தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

1. மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணிமாறன்
தென்னவ ராகித் திகிரி யுருட்டுந் தென்கூடல்
முன்னவ ரன்னங் கண்டறி யாத முடிக்கேற்பப்
பன்மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணிபூண்டான்.

2. மாதவி பாதிரி தாதகி கூவிள மந்தாரந்
தாதவிழ் மல்லிகை முல்லையி லஞ்சி தடங்கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தைசெ ழுங்கர வீரந்தண்
போதவிழ் நந்தி செருந்திகு ருந்தம் புன்னாகம்.

3. முண்டக மென்கடி நீலமு தற்பல முப்போதும்
எண்டிசை யுங்கம ழும்படி நந்தன மெங்குந்தேன்
உண்டிசை வண்டு படிந்துமு ரன்றிட வுண்டாக்கி
வண்டிமிர் சண்பக நந்தன முந்தனி வைத்தானால்.

4. பொய்த்திடு நுண்ணிடை மங்கல மங்கையர் பொன்
பூண்டார்
ஒத்தெழு சண்பக மொய்த்தவ ரும்ப ருடைந்தெங்கும்
வைத்திடு நந்தன வாசம்வி ழுங்கி மணங்கான்று
பைத்து மலர்ந்தன கண்டு மகிழ்ந்து பரித்தோரான்.

5. செருக்கிய வண்டு விழாமலர் கொய்து தெரிந்தாய்ந்து
நெருக்கிய விண்டை நிரைத்தொடை தொங்க
னெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காரூர்
கருக்கிய கண்ணுத லார்திரு மேனி கவின்செய்தான்.

6. அன்னவி யன்பொழின் மாமது ரேச ரடித்தாழ்வோன்
பொன்னவிர் சண்பக மாலைபு னைந்த புதுக்கோலம்
தன்னைவி யந்திவர் சண்பக சுந்தரர் தாமென்னா
முன்னரி றைஞ்சின னிம்பம ணிந்த முடித்தென்னன்.

7. அன்னதோர் நாமம் பெற்றன ரின்று மணிக்கூடன்
முன்னவ ரந்தத் தாமம வர்க்கு முடிக்கேற்றும்
இன்னதோர் நீராற் சண்பக மாற னென்றேபேர்
மன்னிவி ளங்கினன் வங்கிய சூடா மணிதானும்.

8. சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம்மாடே
நண்பக மாரு நன்பணி செய்யு நன்னுளிற்
பண்பகர் சொல்லார் தம்புடை மாரன் படுபோர்மூண்
டெண்பக வெய்வா னுகிய வந்தன் றிளவேனில்.

9. மனிதர்வெங் கோடை தீர்க்கும் வசந்தமென் காலும்
வேறு
துனிதவி ரிளங்கால் வேண்டுஞ் சோலையுஞ் சோலை
வேண்டும்
புனிதநீர்த் தடமும் வேறு புதுமல ரோடை வேண்டும்
பனிதரு மதியும் வேறு பான்மதி வேண்டுங் காலம்.

10. அண்டவான் றருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத்
தேமாத்
தண்டளி ரீன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர் போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி
யெல்லாம்.

11. செங்கதிர் மேனியான்போ லவிழ்ந்தன செழும்பலாசம்
மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட்
புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவஞ் செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா.

12. சேட்டிகைத் தென்கா றள்ளத் தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றுபூங் கொம்ப ராடல்
நாட்டியப் புலவ னுட்ட நகைமுகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்றவன்றே.

13. மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளிதேனக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பா
லில்லென்
றலர்ந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்பரன்றே.

14\. நாறிய தண்ணந் தேமா நறுந்தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை யுருக்குவ குயின்மென் சேவல்
வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்படத் தேயங் காவல்
மாறிய வேந்தன் போல வொடுங்கின மயில்க
ளெல்லாம்.

15\. பொங்கரி னுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று
தென்றல்
அங்கங்கே கலைக டேரு மறிவன்போ லியங்கு மன்றே.

16\. தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயின் முழவ மேங்க
மாமரு தமருங் கிள்ளை மங்கல மியம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய் கைதைவா ளெடுப்ப வேனிற்
கோமகன் மகுடஞ் சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை.

17\. இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவியோடும்
செவ்விய செங்கோ னேமிச் செண்பக மாற னோர்நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி.

18\. மாந்தளி ரீன்று கோங்கு வண்டள வரும்பித் தண்டேங்
காந்தள்செங் கமல மாம்பல் சண்பகங் கழுநீர் பூத்துச்
சாய்ந்தமென் கொடியுந் தானுந் தனியிடத் திருப்பா
னேரே
வாய்ந்ததோர் நாற்றந் தோன்ற வசைந்தது வசந்தத்
தென்றல்.

19\. வெவ்விய வேலான் வீசும் வாசமோந் தீது வேறு
திவ்விய வாச மாக விருந்தது தென்றல் காவில்
வெளவிய வாச மன்று காலுக்கும் வாச மில்லை
எவ்வியல் வாச மேயோ விதுவென வெண்ணங்
கொள்வான்.

20\. திரும்பித்தன் றேவி தன்னை நோக்கினன் றேவி
யைம்பால்
இரும்பித்தை வாச மாகி யிருந்தது கண்டிவ் வாசஞ்
சுரும்பிற்குந் தெரியா தென்னச் சூழ்ந்திரும் பூது
கொண்டீ
தரும்பித்தைக் கியல்போ செய்கை யோவென வையங்
கொண்டான்.

21. ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே யின்ன வாயிரஞ் செம்பொ னென்றக்
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுணர் புலவர் முன்னுத் தூக்கினர் வினைசெய்
மாக்கள்.

22. வங்கத்தார் பொருள்போல் வேறு வகையமை கேள்வி
நோக்கிச்
சங்கத்தா ரெல்லாந் தம்மிற் றனித்தனி தேர்ந்து
தேர்ந்து
துங்கத்தார் வேம்ப னுள்ளஞ் சூழ்பொரு டுழாவி யுற்ற
பங்கத்தா ராகி யெய்த்துப் படருறு மனத்த ரானுர்.

23. அந்த வேலையி லாதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முந்தை யாச்சிம முயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் றருமி யென்றுளான்.

24. ஒருவ னுன்முகத் தொருவன் மார்புறை
திருவ னுடருந் தேவ னுலுரு
அருவ நாலகன் ருனைத் தன்கலி
வெருவ நாடிமுன் வீழ்ந்து வேண்டுவான்.

25. தந்தை தாயிலேன் றனிய னுகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற்
கெந்தை யேயிது பதமென் றேத்தியே.

26. நெடிய வேதநூ னிறைய வாகமம்
முடிய வோதிய முறையி னிற்கெனும்
வடுவி லில்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னுவனே.

27. ஐய யாவையு மறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்கருத்துணர்ந்
துய்ய யோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினுன்.

28. தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினர்
இன்ன நீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினன்.

29. பொற்ற னிச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல்கைக் கொண்டு தொன்னிதி
பெற்றெ டுத்தவன் போன்று பீடுறக்
கற்ற நாவலர் கழக நண்ணினன்.

30. கல்வி யாளர்தங் கையி னீட்டினன்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே
நல்ல நல்லவென் றுவகை நண்ணினர்.

31. அளக்கில் கேள்வியா ரரசன் முன்புபோய்
விளக்கி யக்கவி விளம்பி னர்கடன்
உளக்க ருத்துநே ரொத்த லாற்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினன்.

32. உணர்ந்த கேள்வியா ரிவரொ டொல்லைபோய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னு மின்றமிழ்
சொணர்ந்த வேதியன் கொள்க வின்றெனா
மணந்த தாரினன் மகிழ்ந்து நல்கினன்.

33. வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்து கீரனில் லெனவி லக்கினன்.

34. குற்ற மிக்கவிக் கென்று கூறலுங்
கற்றி லானெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மெல்லைகைப்
பற்ற வாடினன் பண்பு பற்றினன்.

35. உலர்ந்த நெஞ்சுகொண் டொதுங்கி நாயகன்
நலந்த ருங்கழ னண்ணி னனவன்
மலர்ந்த பாடல்கொண் டறிஞர் வைகிடத்
தலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே.

36. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவ னென்னைநீ
மையுண் கண்டவிவ் வழுவு பாடலைக்
கையு ணல்கினுய் கதியி லேற்கெனு.

37. வறுமைநோய் பிணிப்பப் பன்னுள் வழிபடு மடியே னின்பாற்
பெறுபொரு ளிழந்தே னென்று பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றுேய் நின்றன் கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னு லாருனை மதிக்க வல்லார்.

38. எந்தையிவ் விகழ்ச்சி நின்ன தல்லதை யெனக்கியா தென்னுச்
சிந்தைநோ யுழந்து சைவச் சிறுவனின் றிரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனு மான
சுந்தர விடங்க னங்கோர் புலவனுய்த் தோற்றஞ் செய்தான்.

39. கண்டிகை மதாணி யாழி கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலங் குடிகொண் டாகத் தழகெலாங் கொள்ளை கொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன் ருனெனக் குறியிட் டாங்கே
புண்டர நுதலிற் பூத்துப் பொய்யிருள் கிழித்துத்தள்ள.

40. விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப்பையு ளடங்கிப் பக்கத்
தெரிமணிக் கடகத் திண்டோ ளிளையவ ரடைப்பை யோடுங்
குருமணிக் களாஞ்சி யம்பொற் கோடிகந் தாங்க முத்தாற்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்காற் கவரிபால் புரண்டு துள்ள.

41. சொல்வரம் பிகந்த பாத மென்பது தோன்ற வேதம்
நல்லபா துகையாய்ச் சூட நவின்றன கற்றுப் பாட
வல்லவர் மறையி ஞறு மனுமுதற் கலைபோற் பின்பு
செல்லுநூ லாய்ந்தோர் வைகுந் திருந்தவைக் களத்தைச் சேர்ந்தான்.

42. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பினு ரென்னு முன்னங்
கீரனஞ் சாது நானே கிளத்தினே னென்ரு னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

43. சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்ற மென்ருன்றூய
பொற்குற்ற வேணி யண்ணல் பொருட்குற்ற மென்னை யென்ருன்
தற்குற்றம் வருவ தோரான் புனைமலர்ச் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே யென்ரு னையன்.

44. பங்கய முகமென் கொங்கைப் பதுமினி குழலோ வென்ன
அங்கது மனைத்தே யென்ரு ஞலவா யுடையான் றெய்வ
மங்கையர் குழலோ வென்ன வன்னது மந்தாரத்தின்
கொங்கல ரளைந்து நாறுங் கொள்கையாற் செய்கைத் தென்ருன்.

45. பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலு மற்ருேவெனவஃது மற்றே யென்னு
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்

46. கற்றைவார் சடையா னெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சா னும்பரார் பதிபோ லாகம்
முற்றுநீர் கண்ணு னலு மொழிந்தநும் பாடல் குற்றங்
குற்றமே யென்ருன் தன்பா லாகிய குற்றந் தேரான்.

47. தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொருதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தன னவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான்.

5. பாரதியார் பாடல்

இருபதாம் நூற்றுண்டுக் கவிஞர்களில் தலையாயதோர் இடத்தினைப் பெற்று ஒளிர்பவர் மகாகவி பாரதியார் ஆவர். நாட்டின் விடுதலைக்காக நல்ல பல பாடல்களைப் பாடி மக்களிடையில் சுதந்திர வேட்கையினையும் வேகத்தினையும் உண்டாக்கியவர் பாரதியார் ஆவர். தமிழ்நாட்டிற்குப் புத்துணர்ச்சியும், தமிழ் மொழிக்குப் புதிய சுவையும் தந்து, மக்கள் மனத்தில் வீரமும் தீரமும் பொங்கியெழும்படி எளிய இனிய பாடல்கள் பலவற்றை இயற்றிப் ‘பாட்டுக்கொரு புலவன் பாரதி’ எனும் பாராட்டுடன் விளங்குபவர் பாரதியார். உவமை நலம் தோன்ற இவர் பாடும்பொழுது புதிய புதிய உவமைகளை இவர் கையாண்டிருப்பதனைக் காணலாம்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தண்டாத தம் தமிழ்ப் பற்றினையும், “பாரத நாடு பழம்பெரு நாடே; பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே” என்று தம் நாட்டுப் பற்றினையும் வெளிப்படுத்தும் இவர் சமயப்பற்றும், புதுமை வேட்கையும், சீர்திருத்த மனப்பான்மையும் சிறக்கப் பெற்றவராவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரமே இவர்தம் பிறந்த ஊராகும். தந்தை சின்னசாமி ஐயர்; தாய் இலக்குமி அம்மையார். இவர் பிறந்த ஆண்டு கி. பி. 1882 ஆகும். இவர்தம் முப்பத்தொன்பதாம் அகவையில் கி. பி. 1921-ஆம் ஆண்டு மறைந்தார். நாட்டுரிமைக்குத் தம்மை முழுதும் ஆளாக்கிக்கொண்ட இவர் தேசீய கீதங்கள் மட்டுமின்றித் தெய்வப் பாடல்களையும் பாடியுள்ளார். பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு முதலிய மூன்றும் இவர் பாடிய முப்பெரும் பாடல்களாகும்.

பாரதியாரைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்,

பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன், நாட்டிற்
படரும் சாதிப்படை மருந்து!......
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்

என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

கண்ணனைத் தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, சீடனாக, சற்குருவாகக் கண்டு பல பாடல்களைப் பாரதியார் புனைந்துள்ளார். கண்ணன் பாட்டில் 'கண்ணன் என் சேவகன்' என்னும் பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.

கண்ணன் — என் சேவகன்

கூலிமிகக் கேட்பார், கொடுத்த தெலாம் தாமறப்பார்,
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடா, நீ நேற்றைக்கு இங்கு வரவில்லை' என்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டா நாளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறுசெய்வார்;
தாயாதி யோடு தனிஇடத்தே பேசிடுவார்;
உள்வீட்டுச் செய்திஎலாம் ஊரம் பலத்துரைப்பார்;
எள்வீட்டில் இல்லைஎன்றால் எங்கும் முரசறைவார்;
சேவகரால்பட்ட சிரமம்மிக உண்டு கண்டீர்.
சேவகர்இல் லாவிடிலோ செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான்; 'இடைச்சாதி நான்' என்றான்.
'மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடுவேன்
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்.
சொன்னபடி கேட்பேன். துணிமணிகள் காத்திடுவேன்.
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காட்டுவழி ஆனாலும், கள்ளர்பயம் ஆனாலும்
இரவில் பகலிலே எந்நேரம் ஆனாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பம்உறா மற்காப்பேன்.
கற்றவித்தை ஏதும்இல்லை. காட்டு மனிதன், ஐயே!
ஆனபொழு தும்கோல்அடி குத்துப்போர் மற்போர்
நான் அறிவேன்; சற்றும் நயவஞ் சனைபுரியேன்'
என்றுபல, சொல்லிநின்றான். 'ஏதுபெயர்? சொல்' என்றேன்
'ஒன்றும் இல்லை, கண்ணன் என்பார் ஊரில் உள்ளோர் [என்னை' என்றான்.
கட்டுறுதி உள்ளஉடல், கண்ணிலே நல்லகுணம்,
ஒட்டுறவே நன்றா உரைத்திடும் சொல்—ஈங்கிவற்றால்,
தக்கவன்என்று உள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
'மிக்கஉரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்

கூலிஎன்ன கேட்கின்றாய் கூறு' கென்றேன். 'ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை;
நானோர் தனிஆள்; நரைதிரைதோன் றாவிடினும்
ஆன வயதிற்கு அளவில்லை. தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை' என்றான்.
பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு, மிகவும் களிப்புடனே நான் அவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன். அன்றுமுதற் கொண்டு
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன். கண்ணனால்
பெற்றுவரு நன்மைஎலாம் பேசி முடியாது.
கண்ணை இமைஇரண்டும் காப்பதுபோல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான்; வாய்முணுத்தல் கண்டறியேன்
வீதி பெருக்குகிறான்; வீடுசுத்தம் ஆக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெலாம் தட்டி அடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயம் காட்டுகிறான். ஒன்றும் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப், பால்வாங்கி, மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான்—இடைச்சாதி என்று சொன்னான்;
இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்துவிட்டேன்
கண்ணன் எனதுஅகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம் இளமாண்பு சீர்சிறப்பு நற்கீர்த்தி
கல்வி அறிவு கவிதை சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலம்அனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்.

கண்ணனை நான்ஆட் கொண்டேன்!
கண் கொண்டேன்! கண் கொண்டேன்!
கண்ணன் எனை ஆட்கொள்ளக்
காரணமும் உள்ளனவே!

6. அழகின் சிரிப்பு

எழுச்சியும் ஏற்றமுங்கொண்ட புதியதொரு கவிஞர் பரம்பரையினைத் தோற்றுவித்து, தமிழர் தம் நெஞ்சில் நிலையானதோர் இடத்தினைப் பெற்றிருப்பவர் 'புரட்சிக் கவிஞர்' என்றும், 'பாவேந்தர்' என்றும் பலராலும் பாராட்டப்பெறும் பாரதிதாசன் ஆவர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் கி. பி. 1891-ஆம் ஆண்டு புதுவையில் பிறந்து, கனக சுப்புரத்தினம் என்னும் இயற்பெயரோடு வளர்ந்து, பாரதியாரிடம் கொண்ட பற்றின் காரணமாகப் பாரதிதாசன் எனப் பெயரை மேற்கொண்டு வாழ்ந்து 1964-ல் மறைந்தவர் பாரதிதாசன் ஆவர்.

"பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு; பண்பும் உண்டு; பயனும் உண்டு" என்று அறிஞர் பாராட்டுவர். சமுதாயப் புரட்சிக்குப் பல பாடல்கள் புனைந்தவர் பாரதிதாசன். இசைப்பாடல்கள் பல புனைந்து இசைத் தமிழிற்கு ஏற்றந்தந்தார். நாடகங்களையும் எழுதி நாட்டிற்கு வழங்கினர். பாரதிதாசன் கவிதைகள் மூன்று தொகுதிகள், பாண்டியன் பரிசு, குறிஞ்சித்திட்டு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், காதல் நினைவுகள், இசையமுது, குடும்ப விளக்கு, நல்ல தீர்ப்பு, அமைதி, கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா முதலியன இவர்தம் படைப்புக்களாகும்.

'அழகுப் பொருள்கள் என்றும் அழியா இன்பம் நல்கும்' (A thing of beauty is a joy for ever) என்று கீட்ஸ் (Keats) என்னும் கவிஞர் பெருமகனர் குறிப்பிட்டுள்ளார். நம் கவிஞர் பாரதிதாசனும் 'அழகின் சிரிப்பு' என்னும் நூலின் முன்னுரையில், "இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது ...காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும்.

கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும் தமிழர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். காலையிளம் பரிதியும், கடற்பரப்பும் ஒளிப்புனலும், சோலையும், மலரும், தளிரும், மாலையில் மேற்றிசையில் இலகும் மாணிக்கச் சுடரும், ஆலஞ்சாலையும், அழகுக் கிளியும் அவருக்கு அழகு கொலுவீற்றிருக்கும் திருவிடங்களாகும்.

இயற்கைப் பொருள்களைப் பத்து அறுசீர் விருத்தங்களால் எளிய நடையில் 'அழகின் சிரிப்பா'கச் சித்திரித்துள்ளார் பாரதிதாசன். 'அழகின் சிரிப்பு' எனும் தொகுதியினின்றும் 'கடல்', 'ஞாயிறு' எனும் இரு பகுதிகள் இங்குத் தரப்பெற்றுள்ளன.

கடல்

மணல், அலைகள்

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங் கடல் ஓரமெல்லாம்,
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை; அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்;
புரண்டிடும்; பாராய் தம்பி. 1

மணற்கரையில் நண்டுகள்

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும். 2

புரட்சிக்கப்பால் அமைதி

புரட்சிக்கப் பால்அ மைதி
பொலியுமாம் அதுபோல், ஓரக்
கரையினில் அலைகள் மோதிக்
கலகங்கள் விளைக்கும்; ஆனால்
அருகுள்ள அலைகட் கப்பால்
கடலிடை அமைதி அன்றோ!
பெருநீரை வான்மு கக்கும்;
வான்நிறம் பெருநீர் வாங்கும்! 3

கடலின் கண்கொள்ளாக் காட்சி

பெருபுனல் நிலையும், வானிற்
பிணைந்த அக்கரையும், இப்பால்
ஒருங்காக வடக்கும் தெற்கும்
ஓடுநீர்ப் பரப்பும் காண
இருவிழிச் சிறகால் நெஞ்சம்
எழுந்திடும்; முழுவதும் காண
ஒருகோடிச் சிறகு வேண்டும்
ஓகோகோ எனப்பின் வாங்கும். 4

கடலும் இளங் கதிரும்

எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்!
வெளியெலாம் ஒளியின் வீச்சு!
முழங்கிய நீர்ப்ப ரப்பின்
முழுதும்பொன் னொளி பறக்கும்.
பழங்கால இயற்கை செய்யும்
புதுக்காட்சி பருகு தம்பி! 5

கடலும் வானும்

அக்கரை, சோலை போலத்
தோன்றிடும்! அந்தச் சோலை,
திக்கெலாம் தெரியக் காட்டும்
இளங்கதிர்ச் செம்ப ழத்தைக்!
கைக்கொள்ள அம்மு கில்கள்
போராடும்! கருவா னத்தை
மொய்த்துமே செவ்வா னாக்கி
முடித்திடும்! பாராய் தம்பி! 6

எழுந்த கதிர்

இளங்கதிர் எழுந்தான்; ஆங்கே
இருளின் மேல் சினத்தை வைத்தான்;
களித்தன கடலின் புட்கள்;
எழுந்தன கைகள் கொட்டி!

ஒளித்தது காரி ருள்போய்!
உள்ளத்தில் உவகை பூக்க
இளங்கதிர் பொன்னி றத்தை
எங்கணும் இறைக்க லானான். 7

கடல் முழக்கம்

கடல்நீரும், நீல வானும்
கைகோக்கும்! அதற் கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில்வீணை; அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத் தின்பத்தை
வடிக்கின்ற புலவன்! தம்பி
வண்கடல் பண்பா டல் கேள்! 8

நடுப்பகலிற் கடலின் காட்சி

செழுங்கதிர் உச்சி ஏறிச்
செந்தணல் வீசு தல்பார்!
புழுங்கிய மக்கள் தம்மைக்
குளிர்காற்றால் புதுமை செய்து
முழங்கிற்றுக் கடல்! இவ்வைய
முழுவதும் வாழ்விற் செம்மை
வழங்கிற்றுக் கடல்! நற் செல்வம்
வளர்கின்ற கடல்பார் தம்பி! 9

நிலவிற் கடல்

பொன்னுடை களைந்து, வேறே
புதிதான முத்துச் சேலை
தன்இடை அணிந்தாள் அந்தத்
தடங்கடற் பெண்ணாள் தம்பி
என்னென்று கேள்;அ தோபார்
எழில்நிலா ஒளிகொட் டிற்று!
மன்னியே வாழி என்று
கடலினை வாழ்த்தாய் தம்பி! 10

ஞாயிறு

எழுந்த ஞாயிறு

ஒளிப்பொருள் நீ! நீ ஞாலத்
தொருபொருள், வாராய்! நெஞ்சக்
களிப்பினில் கூத்தைச் சேர்க்கும்
கனற்பொரு ளே, ஆழ் நீரில்
வெளிப்பட எழுந்தாய்; ஓகோ
விண்ணெலாம் பொன்னை அள்ளித்
தெளிக்கின்றாய்; கடலிற் பொங்கும்
திரையெலாம் ஒளியாய்ச் செய்தாய். 1

வையத்தின் உணர்ச்சி

எழுந்தன கூயிரின் கூட்டம்!
இருள் இல்லை அயர்வும் இல்லை!
எழுந்தனை ஒளியே, எங்கும்!
எங்கணும் உணர்ச்சி வெள்ளம்!
பொழிந்தநின் கதிர் ஒவ் வொன்றும்
பொலிந் தேறி, மேற்றி சைமேல்
கொழுந்தோடக் கோடி வண்ணம்
கொழித்தது சுடர்க்கோ மானே! 2

காட்சி ஞாயிறு

பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி
திருதிரு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே!
மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத்
தகளி யிற்பெரு விளக்கே! 3

ஒளிசெய்யும் பரிதி

கடலிலே கோடி கோடிக்
கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்!
நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ
இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ
அமைந்தனை! பரிதி வாழி! 4

கதிரும் இருளும்

என்ன காண் புதுமை! தங்க
இழையுடன் நூலை வைத்துப்
பின்னிய ஆடை, காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர்கடல் நெளிதல் கண்டேன்;
உன்கதிர், இருட் பலாவை
உரித்தொளிச் சுளையூட் டிற்றே 5

கரைபோக்கி எழில்செய்தாய்

இலகிய பனியின் முத்தை
இளங்கதிர்க் கையால் உண்பாய்!
அலை அலையாய் உமிழ்வாய்
அழகினை ஒளியை யெல்லாம்!
இலைதொறும் ஈரம் காத்த
கறைபோக்கி இயல்பு காப்பாய்!
மலையெலாம் சோலை எல்லாம்
நனைக்கின்றாய் சுடர்ப்பொன் நீரால்! 6

எங்கும் அது

தாமரை அரும்பி லெல்லாம்
சரித்தனை இதழ்கள் தம்மை!
மாமரத் தளிர்அ சைவில்
மணிப்பச்சை குலுங்கச் செய்தாய்!

ஆமாமாம் சேவற் கொண்டை
அதிலும் உன் அழகே காண்பேன்!
நீமன்னன்; ஒளியின் செல்வன்;
நிறைமக்கள் வாழ்த்தும் வெய்யோன். 7

பரிதியும், செயலும்

இறகினில் உயிரை வைத்தாய்
எழுந்தன புட்கள்! மாதர்
அறஞ்செய்யும் திறஞ்செய் திட்டாய்!
ஆடவர் குன்றத் தோளில்
உறைகின்ருய்! கன்று காலி
உயிர்பெறச் செய்கின் ருய்நீ!
மறத்தமிழ் மக்கள் வாழ்வில்
இன்பத்தை வைத்தாய் நீயே. 8

பரிதி இன்றேல் நிலாவுக்கு ஒளியில்லை

வாழும் நின் ஒளிதான் இன்றேல்
வானிலே உடுக்கள் எல்லாம்
தாழங்காய் கடுக்காய் கள்போல்
தழைவின்றி அழகி ழக்கும்!
பாழ்என்ற நிலையில் வாழ்வைப்
பயிரிட்ட உழவன் நீ; பைங்
கூழுக்கு வேரும் நீயே
குளிருக்குப் போர்வை நீயே! 9

ஞாயிறு வாழி

விழிப் பார்வை தடுத்து வீழ
விரிகின்ற ஒளியே, சோர்வை
ஒழிக்கின்ற உணர்வே, வையத்
திருளினை ஒதுக்கித் தள்ளித்
தழற்பெரு வெள்ளந் தன்னைச்
சாய்ப்போயே, வெயிலில் ஆடித்
தழைக்கின்றோம் புதுஞா யிற்றுத்
தனிச்சொத்தே வாழி நன்றே. 10

77162

———

குறிப்புரை

1. திருக்குறள்

1. அன்புடைமை

வாழ்க்கைத்துணை, மக்கள் முதலிய தொடர்புடையார்கண் அன்புடையனாதல். "அன்புடைமையாவது தன்னைச் சார்ந் தார்மாட்டுக் காதலுடையவனாதல்" என்பர் மணக்குடவர்.

அன்பினது உண்மை

1. அன்பிற்கும் – உம் : சிறப்பும்மை ஆர்வலர் – அன்புடையவர். புன் கண் நீர் – கண்ணிலேயிருந்து பொழியும் புல்லிய நீர். பூசல் தரும் – தூற்றிவிடும்.

   "அன்பு மனத்திலே இருந்தால் அதனைப் புறத்திலே புறப்படாமல் அடைக்குந் தாழும் இல்லை; அன்பிருந்த இடம் கண்ணீர் காட்டிக்கொடுக்கும்" என்னும் பரிதியார் உரை ஈண்டு நோக்கத்தக்கது.

அன்பினது சிறப்பு

2. அன்புடையார்க்கல்லது அறஞ்செய்தல் அரிது. என்பும் – எலும்பும். உடம்பையே தருவர் என்பது குறிப்பு. சிபியின் கதை காண்க. அன்புடையார் உலகச் சொத்தாகிவிடுகின்றனர். அவர்களின் உடம்பின் பகுதியான எலும்பும் பிறருடைய சொத்தாகி விடுகின்றது.

   என்பு – ஆகுபெயர். என்பும், உம் : சிறப்பும்மை.

3. அன்பு செய்வதற்கே உயிர் உடலைத் தாங்கி உள்ளது. ஆருயிர்க்கு – பெறுதற்கரிய மக்களுயிர்க்கு, இயைந்த– பொருந்திய. வழக்கு – நெறியின் பயன்; ஆகு பெயர்.

4. "அன்பினுல் விருப்பம் உண்டாகும்; விருப்பத்தால் நட்பு உண்டாகும்" என்பர் பரிமேலழகர். பரிதியார் "அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞான நேயத்தைக் கொடுக்கும்; அந்த ஞானம் பிறவா நெறியாகிய முத்தியைக் கொடுக்கும்" என்பர்.

ஆர்வமுடைமை – விருப்பமுடைமை. நண்பு – நட்பு. நாடா – அளவிறந்த; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

5. வையத்தில் வாழும் உயிரனைத்திற்கும் பொருந்திய முறையினுல் அன்பு செய்த அதுவே, இன்புற்றவராய் வாழ்கின்றவர் எய்தும் செல்வச் சிறப்பாகும்.

வழக்கு – ஆகுபெயர்.

6. அன்பு அறத்திற்கு மட்டுமன்றி மறத்திற்கும் துணையாக அமைவதாகும்.

சார்பு – துணை. மறம் – பாவம் (பரிமேலழகர்). வீரம் என்றும் பொருள் கொள்ளலாம். வீரனுடைய வீரத்தையும் அன்புதான் விளங்கச் செய்கிறது.

அன்பில் வழிப்படும் குற்றம்

7. எலும்பில்லாத உயிரினை வெயில் சுடுமாறுபோல அன்பில்லாத உயிரினை அறம் சுடும்

அறம் – அறக்கடவுள்.

அன்பு இல்லாதவன் எலும்பு இல்லாத புழுவைப் போன்றவன்; வெயில் புழுவைப் பொசுக்கிவிடுதல் போல இயற்கை நியதி (அறம்) அவனை அழித்து விடும்.

8. உள்ளத்தில் அன்பில்லாதார் வாழும் வாழ்க்கை வன் னிலத்தின்கண் வற்றல் மரம் தளிர்த்தது போன்றும்.

வன்பாற்கண் – வலிய பாலை நிலத்தில் அல்லது பாறையான நிலத்தில்.

9. உடம்பிற்கு அகத்துறுப்பாகும் அன்பில்லார்க்குப் புறத்துறுப்புக்களெல்லாம் நன்கு பொலிந்திருந்தும் பயனில்லை.

புறத்துறுப்பு – இடனும் பொருளும் ஏவல் செய்வாரும் முதலியன என்பர் பரிமேலழகர்; "ஒருவர், தமது யாக்கையினது புறத்துறுப்பாகிய மார்பும் தோளும் முகமும் மயிர்முடியும் பிறவுஞ் சால நல்ல எனினும், அவை அங்ஙனம் தோன்றிக் கெடுத்தலல்லது அகத்துறுப்பாகிய அன்பு போல இவர்க்கு ஒரு நன்மை செய்வதில்லை" என்பர் காளிங்கர்.

10. அன்பின் வழியிலே நிற்பான் உயிர் நிலை நிற்கும்; அன்பில்லார் உயிர் என்புந் தோலும் போர்த்த உடம்பேயாகும்.

உயிர்நிலை – உயிர்நிலைத்து நின்ற உடம்பு.

2. விருந்தோம்பல்

உண்ணுங்காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ணல் என்பர் மணக்குடவர்.

விருந்தோம்பலின் சிறப்பு

1. இல்வாழ்க்கை சிறப்பது விருந்தினரைப் பேணி உபசரித்தலில் உள்ளது.

இல்வாழ்வது – வீட்டின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை; வேளாண்மை – உபகாரம்.

2. விருந்தினர் புறத்தே காத்திருக்க அகத்தே சாவா மருந்தெனினும் உண்ணுதல் அடாதாம்; சாவா மருந்து – அமிர்தம்; சாவா – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வேண்டற் பாற்றன்று – முறைமையுடையதன்று.

நஞ்சாகிலுங் கூட விருந்து புசிப்பது நன்று என்பர் பரிதியார்; அப்போது அது அமிழ்தாகிவிடும் என்பது குறிப்பு.

விருந்தோம்புவார் எய்தும் பயன்

3. நாடோறும் வந்த விருந்தினரைப் பேணுபவனது ஆக்கம் ஒரு நாள் கேடுறுவதில்லை.

வைகலும் – நாள்தோறும். ஓம்புவான் – புறந்தந்து பாதுகாப்பவன்; வினையாலணையும் பெயர். பருவந்து – வருந்தி. பாழ்படுதல் – கெடுதல். "நாடோறும் விருந் தோம்புவானுக்கு அதனற் பொருள் தொலையாது, மேன்மேற் கிளைக்கும்" என்பர் பரிமேலழகர்.

4. மனமகிழ்ந்து விருந்தோம்புவானிடத்துச் செல்வம் செழிக்கும்.

அகனமர்ந்து – மனம் மகிழ்ந்து. செய்யாள் – திருமகள். முகனமர்ந்து – முகம் இனியனாய்.

5. முன்னே விருந்தினரை உண்ணவைத்தல் பின்னர் மிகுந்ததைத் தான் உண்ணுபவன் நிலத்தின்கண் விளைதற்பொருட்டு விதைக்கவும் வேண்டா.

வித்தும் – விதையும். உம், சிறப்பும்மை. மிச்சில் – மிகுந்தது. மிசைவான் – உண்ணுவான். புலம் – விளை நிலம். கொல் – அசைநிலை. "விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது, கழனிக்கு எருப்போட்டு நீர்த் தேக்கினது போல; ஒன்று நூருயிரம் விளையும் என்ற வாறு" என்பர் பரிதியார்.

தானே விளையும் என்பது உயர்வு நவிற்சியில் உறுதிப் பொருள் தோன்றக் கூறுகிருர் எனக்கொள்ளலாம்.

6. வந்த விருந்தினரை உபசரித்து வரும் விருந்தினர்க்கு எதிர்நோக்கியிருப்பவன் தேவர் உலகிற்கு நல்ல விருந்தாவான்.

வருவிருந்து – இடவழுவமைதி. நல்விருந்து எய்தா விருந்து என்பர் பரிமேலழகர். வரவு பார்த்தல் – விருந்தின்றி உண்ணுமை என்பர் மணக்குடவர்.

7. விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் அவ்விருந்தின் தகுதியளவேயாகும்.

வேள்வி – விருந்தோம்புதல். "தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்" என்ற நாலடியாரின் செய்யுட்படி இன்ன அளவிற்று என்று சொல்ல முடியாது என்பர் பரிமேலழகர்.

விருந்தோம்பா வழிப்படும் குற்றம்

8. விருந்தினரை உபசரித்தால் வேறு வேள்விகள் வேண்டியதில்லை.

வேள்வி – ஆகுபெயர்.

9. உடைமைக் காலத்தும் இன்மையாவது விருந்தோம்புதலை இகழும் பேதைமையாகும். அது பேதையார் மாட்டே உளதாம்.

மடவார் – அறிவிலார்.

இன்முகம் வேண்டும்

10. மென்மலராம் அனிச்சம் மோந்தால் அல்லது வாடாது; விருந்தினரோ ஒருவர் முகந்திரிந்து நோக்கவும் வாடுவர்.

மோப்ப – மோந்துழி. அனிச்சம் – ஆகுபெயராய்ப் பூவைக் குறித்தது. உவமை அணி.

3. இனியவை கூறல்

மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல்.

இன்சொற்கு இலக்கணம்

1. இன்சொலால்: ஆல் – அசைநிலை. ஈரம் – அன்பு. அளைஇ – கலந்து; சொல்லிசையளபெடை. படிறு – வஞ்சனை. செம்பொருள் – (ஈண்டு) அறம்.

ஒருவனைக் கடிந்து சொல்லவேண்டுமிடத்தும் இன்சொல்லாலே கடியவேண்டும் என்பது.

இன்முகத்தோடு கூடிய இன்சொல்

2. மனம் பொருந்திக் கொடுத்தலினும் முகம் பொருந்தி இனிமைச் சொல் சொல்லுதல் நல்லது.

'நகையுடை முகத்தையாகி இன்னுரை நல்கு நாவால்' – என்பர் கம்பர்.

3. பார்வையிலும் பேச்சிலும் அன்பு கலந்திருக்க வேண்டும்.

அமர்ந்து – விரும்பி. 'நோக்கி' என்னும் வினையெச்சம் 'இன்சொல்' என அடையடுத்து நின்ற முதனிலைத் தொழிற் பெயர் கொண்டது.

இனியவை கூறுவார் எய்தும் பயன்

4. எல்லோரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன் சொல்லை உடையார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லை; துன்புறூஉம் – துன்பத்தை மிகு விக்கும். துவ்வாமை – நல்குரவு. இல்லாகும் – இல்லை யாகும். இன்புறூஉம்–இன்பத்தை மிகுவிக்கும். துன் புறூஉம், இன்புறூஉம் – இன்னிசை யளபெடைகள்.

5. பிறரிடத்துத் தாழ்ந்து நிற்றலும் இன்சொல் உடைய வனயிருத்தலுமே ஒருவனுக்கு உண்மையான அணி யாம்; மெய்க்கணியும் பிற அணிகள் அணியாகா; மற்று – அசைநிலை.

6. பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தான் ஆய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுவனயின், அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும். அல்லவை – பாவம். நாடி ஆராய்ந்து.

7. இனிய – பண்பினின்றும் நீங்காத சொல் பிறரால் விரும்பப்படுதலையும் பொருளையும் ஒருங்கே தரும். நயன் – நீதி; உலகத்தோடு பொருந்துதல். நன்றி – அறம்.

8. பொருளால் பிறர்க்கு நோய் செய்யாத இனியசொல் ஒருவனுக்கு இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் பயக்கும்.

சிறுமையுள் நீங்கிய – பிறர்க்குத் துன்பம் செய்யாத.

இன்னாத கூறலின் குற்றம்

9. பிறர் கூறிய இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அனுபவித்து அறிகின்றவன் பிறரிடத்து வன்சொல்லைச் சொல்லுவது பயனில்லை.

இனிதீன்றல் – இன்பந்தருதல். எவன் கொலோ – எதற்காகவோ? இனிது – வினைக்குறிப்புப் பெயர்.

10. இனிய சொற்களிருக்க இனிமையற்ற சொற்களை ஒருவன் கூறுவது, தன் கையில் இனிய கனியிருப்பவும் இன்னாத காய்களை நுகர்ந்ததனை ஒக்கும்.

“இனிய கனிகள் என்றது ஔவையுண்ட நெல்லிக் கனிபோல அமிழ்தானவற்றை; இன்னாத் காய்கள் என்றது காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை” என்பர் பரிமேலழகர்.

“நல்ல வார்த்தை இருக்கத் தீயவை கூறல் நல்ல பழம் இருக்க வேப்பங்காயைத் தின்பதற்கு ஒக்கும்” என்பர் பரிதியார்.

4. செய்ந்நன்றியறிதல்

தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. “பிறர் செய்த தீமையை மறந்து நன்மையை மறவாமை” என்பர் மணக்குடவர்.

உதவிக்கு அளவில்லை

1. தனக்கு முன் ஓர் உதவி செய்யாது இருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாருகக் கொடுத்தாலும் ஈடாகாது.

ஆற்றலரிது – ஒத்தலரிது.

2. உதவ வேண்டுங்காலம் தப்பாமல் செய்த உதவி சிறிதாயிருப்பினும் அஃது உலகத்தினும் மிகப் பெரிதாகும்.

காலத்தினுல் – காலத்தில்; வேற்றுமை மயக்கம். ஞாலத்தில் – உலகத்தைவிட. மாண – மிகவும்.

3. இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராயாது செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின் அதன் நன்மை கடலினும் பெரிதாம்.

தூக்கார் – ஆராயாதார். நயன் – ஈரமுடைமை. தூக்கின் – ஆராயின். கடலின் பெரிது – கடலைக் காட்டிலும் பெரிது.

நல்லவர்க்குச் செய்த உதவி

4. திணையளவு நன்றி செய்தாராயினும் அதனை அவ்வள விற்று என்று நினையாது, அதன் பயனை யறிபவர் பனையளவாகக் கொள்வார்.

திணை, பனை – சிறுமை பெருமைகளுக்கு.

5. கைம்மாருன உதவி, முன் செய்த உதவியின் அளவு அன்று; அது செய்யப்பட்டார் சால்பின் அளவிற்று; வரைத்தன்று – அளவிற்றன்று. சால்பு – அமைதி.

நன்றி செய்தாரது நட்பு

6. "துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினரது நட்பை விடா தொழிக; அறிவு ஒழுக்கங்களில் குற்றமற்ருரது கேண்மையை மறவாது ஒழிக" என்பர் பரிமேலழகர்.

துப்பு – பற்றுக்கோடு.

7. தம் துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை எழு வகைப் பிறப்பினும் நல்லோர் நினைப்பர்.

உள்ளுவர் – நினைப்பர்; விழுமம் – துன்பம்; துடைத் தவர் – நீக்கினவர்.

தீமையை மறக்கவேண்டும்

8. ஒருவன் முன்னால் செய்த நன்மையை மறப்பது அறனன்று; ஒருவன் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது அறனாகும்.

நன்றல்லது – நன்றல்லாத தீமை.

அன்றே – அப்பொழுதே. நன்று – அறன்.

9. தனக்கு முன் ஒரு நன்மை செய்தவர் பின் கொன்றா லொத்த தீமை செய்தாலும் அவையெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றனை நினைக்க இல்லையாம்.

கொன்றன்ன – கொன்றாற் போன்ற. நன்று – நன்மை.

செய்ந்நன்றி கோறலின் கொடுமை

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டு; செய்ந் நன்றி கொன்றார்க்கு எந்தக் காலத்திலும் பிழைப் பில்லை.

உய்வுண்டாம் – பாவத்தின் நீங்கும் வாயில். ‘உதவி கொன்றார்க்கு ஒன்றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ’ என்பர் கம்பர்.

5. நடுவுநிலைமை

நட்டார் மாட்டும் பகைவர் மாட்டும் ஒரே வகையால் இருக்கும் தன்மை; அனைவரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்பதாகும்.

1. தகுதி – நடுவுநிலைமை. பகுதியால் – உற்றார் நொதுமலர் மாற்றார் என்ற வேறுபாட்டால். பாற்பட்டு ஒழுகப் பெறின் – தன் முறைமை விடாது ஒழுகின். தகுதி உடையதனைத் ‘தகுதி’ என்றார். ‘பெறின்’ என்பது அருமை தோன்ற நின்றது.

2. செப்பம் – நடுவுநிலைமை. ஆக்கம் – செல்வம். எச்சம் – வழிவழியாக வருவோர், எஞ்சி நிற்பார். ஏமாப்பு – வலியாதல்.

3. அன்றே – அப்போதே. ஒழியவிடல் – முற்றும் விடுக. ‘தரினும்’ என்பது ‘தராது’ என்பதை விளக்கி நின்றது.

4. எச்சம் – மக்கள்; எஞ்சி நிற்கின்ற புகழ், செல்வம் முதலிய எல்லாவற்றிற்கும் பொருந்துவதாகும். மக்கள் உண்மையாலும் இன்மையாலும் அறியப்படும் என்றும் கூறுவர்.

5. கேடு – தீவினையால் வரும் கேடு. பெருக்கம் – செல்வம்; இல் அல்ல – இயல்பாக உள்ளன. எனவே அவற்றின் காரணமாக மனம் கோணுமையே சான்றோர்க்கு அணியாகும் என்பதாம், கோடாமை நிலைதடுமாருமை, ஒரு நிலைக்கண் நிற்றல்.

6. கெடுவல் என்பது – கெடுவதைக் காட்டும் முன் எச்சரிக்கை. நடுவொரீஇ – நடுநிலையின் நீங்கி. அல்ல-நல்லதல்லாதன. “நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின் செயின் என்றார்” என்று விளக்கங் கூறுவர் பரிமேலழகர்.

7. நடுவாக – நடுநிலையில் நின்று. நன்றிக்கண் – அறத்தின் வழி. உலகம் – உயர்ந்தோர். ‘நடுநிலைமை தவருதவர் கெடுவதுபோலத் தோன்றினும் உண்மையில் கேடு சூழப்பெற்றவரல்லர்’ என்பதாம். தாழ்வு கேடு – ஆகுபெயர்கள்.

8. உவமை வாயிலாக நடுநிலைமையை விளக்குகிறார். சமன்செய்து – சமனாக நின்று. சீர்தூக்கும் – தன்னிடம் வைக்கும் பாரத்தை நேரிய வழியில் வரையறுக்கும். கோல் – துலாக் கோல். அமைந்து – நலத்தால் பொருந்தி. ஒரு பால் – ஒரு பக்கம்; கோடாமை – சாயாதிருத்தல். அணி – அழகு.

9. சொல் கோட்டம் – சொல்லில் நிலைதவறி வளைதல். செப்பம் – நடுவுநிலைமை. ஒரு தலையா – ஒரு பக்கமாக. உட்கோட்டம் – மன வளைவு, மனம் ஒரு பக்கமாகத் தாழ்தல்.

10. வாணிகம் - இலாபம்; பிறவற்றையும் தம்முடையதாகக் கருதிச் செய்வதுதான் வாணிகருக்கு உண்மையில் இலாபம் தருவதாகும் என்கிறார். வேறு வகையில் வருவன இலாபம் போலத் தோன்றினும் முடிவில் இழப்பையே தரும் என்பதாம்.

பேணி – போற்றிக் காத்து. பிறவும் – பிறர் பொருளையும். தம்போல் – தம்பொருள்போல்.

2. மணிமேகலை

1. இவள் - (ஈண்டு ஆதிரை).

1, 2. விஞ்சையர் பூங்கொடி - காயசண்டிகை.

2. மாதர்க்கு - ஆதிரைக்கு. புகுந்தது - நிகழ்ந்தது.

3. ஆதிரை கணவன் - சாதுவன். ஆயிழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவள்.

4. தகவிலன் - தகுதிப்பாடற்றவன்.

5. ஆயிழை - அழகிய அணிகலன்களை அணிந்தவள். (ஈண்டு ஆதிரையைக் குறித்து நின்றது).

6. கணிகை - வேசை. கைத்தூண் - தீயவொழுக்கத்தால் வந்த உணவு; கை - ஒழுக்கம்.

7. வட்டினும் - வட்டாடலிலும். சூதினும் - சூதாடலிலும். வழங்கி - கொடுத்து.

8. கெட்ட பொருள் - கணிகைக்கும் வட்டிற்கும் சூதிற்கும் கொடுக்கப்படுதல் பற்றி, 'கெட்ட பொருள்' என்றார். பொருளின் கிளை - பொருளின் பகுதிகள்.

9. பிறர் நலம் காட்டல் - பிறரிடம் மனஞ் செல்லல்.

10. காணமிலி - பொன்னில்லாதவன்; காணம் - பொன். கையுதிர்க் கோடல் - விட்டு நீங்குதல். உம்: உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது.

11. வங்கம் - கலம் (கப்பல்). வணிகர் - வியாபாரிகள்.

12. தங்கா வேட்கை - பலவிடத்தும் செல்லவேண்டுமென்ற விருப்பம். தங்கா வேட்கை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தானென்றது சாதுவனை.

13. நளியிரு முந்நீர் - பெருமையும் கருமையும் கொண்ட கடல் வளி - காற்று. கலன் - கப்பல்.

14. ஒடி மரம் - பாய்மரத்தின் ஒடிந்த துண்டம். உதைப்ப - செலுத்த.

15. நக்க சாரணர் - உடையில்லாமற் சஞ்சரிப்பவராதலின் நாகர், 'நக்க சாரணர்' எனப்பட்டார்; நக்கம் - நக்நம் - நிருவாணம்.

16. பான்மை - பகுதித் தன்மை.

17. நாவாய் - கப்பல். கேடுற - கவிழ.

18. போயினன் - சாதுவன். உய்ய - பிழைக்க.

19. இடையிருள் யாமத்து - இருளையுடைய இடையாமத்தில் யாமம் - இரவு. எறிதிரை - வினைத்தொகை. பெருங் கடல் - பண்புத்தொகை.

20. உடைகலப்பட்டு - உடைந்த கப்பலில் அகப்பட்டு ஒழிந்தோர் - இறந்தோர்.

21. என - என்று சொல்ல.

22. ஒண்ணழல் - ஒளிவிடுகின்ற நெருப்பு.

23. ஈமம் - பிணஞ் சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு; மயானமுமாம்.

24. தாரீர் - தருவீர்.

25. சுடலைக்கான் - மயானம் படுத்து - செய்து.

26. முடலை விறகு - முறுக்குண்ட விறகு. பொத்தி - மூட்டி.

27. உய்ப்ப - செலுத்த

28. புக்குழி - புகுந்தவிடத்து. அவள் - ஆதிரை.

29. பாயற்பள்ளி - படுக்கையிடம்.

30. உறை - ஆடை. உருஅ - உருமல்.

31. ஆடிய - பூசிய.

32. தொன்னிறம் - பழைய நிறம். வழாது - வழுவாமல்.

33. விரை - நறுமணம்.

34. திருவின் செய்யோள் - திருமகள்.

37. அரும்பெறற் கணவன் - பெறுதற்கரிய கணவன்.

44. அந்தரம் - ஆகாயம். அசரீரி - வானொலி. அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வம். அறைதலும் - ஒலித்தலும்.

46. போதுவாள் - வருவாள்.

47. கவல்வு - கவலையடைதல். மனையகம் - மனையிடம்.

48. கண்மணியனையான் - கணவன். கடிது - விரைவில்.

49. முட்டாள் - வழுவாளாய். பொழிமழை - வினைத்தொகை.

50. பெண்டிரும்; உம்மை : உயர்வு சிறப்பு.

53. பிறங்கல் - மலை. நீழல் - நிழலில்.

54. மஞ்சு - மேகம். மால் - பெருமை; மயக்கமுமாம். உழந்த - வருந்திய. நோய்கூர்ந்து - நோய் மிகுந்து.

55. துஞ்சு துயில் - மிக்க உறக்கம். சூர் - அச்சம்.

56. நயமிலர் - இனிமையில்லாதவர்.

57. பரிபுலம்பினன் - மிகுதியும் வருந்தினவன்.

58. அளியன் - இரங்கத்தக்கவன்.

60. அவர்பாடை - அவர் (நாகர்) பேசும் மொழி. மயக்கறு மரபிற் - குற்றந் தீர்ந்த முறையில்.

61. கடுந்தொழின் மாக்கள் - நாகர்.

63. அருந்திறல் - பெறுதற்கரிய திறலையுடையாய்.

66. குழிசி - பானை. கழிமுடை நாற்றமும் - மிக்க புலால் நாற்றமும்.

67. உணங்கல் - வற்றல்.

68. எண்கு - கரடி. பிளவு - பெண் கரடி.

69. பெண்டு - மனைவி. பெற்றி - தன்மை.

70. பாடையிற் பிணித்து - மொழியினாலே வயமாக்கி.

71. கோடு - கிளை. அவன் - நாகர்களுடைய குருமகன்.

73. அலைகடல் - வினைத்தொகை.

75. அளியன் - அளிக்கத்தக்கான்.

78. அயர்ந்து - கவலையுற்று.

82. காண்குவம் - அறிவேம்.

83. சினத்தினன் சொல்லென - கோபமுடையவனாய்ச் சொல்வாயென்று நாகருடைய குருமகன் கேட்ப. சொல்லும் - சாதுவன் சொல்லுவான்.

84. கோறல் - கொல்லுதல்.

85. கயக்கு - கலங்குதல்.

89. அல்லறம் - அறமல்லாத செயல், பாவம் என்றபடி.

90. உரவோர் - அறிவுடையோர்.

91. கண்டனையாக - அறிந்தாயாகுக. கடுநகை - பெருஞ் சிரிப்பு.

95. செவ்வனம் - நேரே.

98. தடிந்து - வெட்டி. எரியூட்டினும் - கொளுத்தினாலும்.

100. புக்கில் - புகுமிடம்.

102. காவதம் - காதம்.

103. சேண் - நெடுந்தூரம்.

106. எரிவிழி - தணல் போன்று எரியும் கண்களையுடைய. வினைத்தொகை.

107. நன்றறி - அறத்தினை அறிகின்ற.

112. படர்குவை - செல்வாய்.

113. ஒல்லும் நெறி - இயலும் வழி. இவ்வடி

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"

என்ற திருக்குறளின் (33) கருத்தைத் தழுவி வந்துள்ளமை காண்க.

115. அடு தொழில் - கொல்லுந் தொழில்.

116. மூத்துவிளிமா - முதுமையுற்று இறக்கும் விலங்குகள்.

117. தீத்திறம் - கொலை. சிறுமகன் - நாகன்,

122. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன; விரை - வாசனை.

125. வங்கஞ் சேர்ந்ததில் - சேர்ந்த கப்பலில்.

128. ஆங்கனமாகிய - அத்தன்மையை உடையளாகிய (ஆதிரை).

131. பிச்சை பெறும்பொழுது துறவறத்தினை மேற்கொண்டொழுகுவோர் மௌனமாக நிற்க வேண்டுமென்பது விதியாதலின், 'புனையா வோவியம் போல நிற்றலும்' என்றார். புனையா வோவியம் - வண்ணங்களைக் கொண்டெழுதாத வடிவைக் கோட்டின சித்திரம்.

134. பாரகம் - உலகம். அறுகென — அறுக என; அகரம் தொக்கது.

135. ஆருயிர் மருந்து - சோறு.

3. கம்பராமாயணம்

1. அரந்தை - துன்பம். தழீஇ - தழுவி, சொல்லிசை அளபெடை.

2. தொடர்ந்து - தழுவியெடுத்து. வீழ்ந்தாள், இயம்பலள் : முற்றெச்சங்கள். நீடு உயிர்க்க லுற்ருள் - பெருமூச்சு விடத் தொடங்கினுள்.

3. காண்டி - காணுதி - பார் ; சொல்லிடு - சொல்வாயாக.

4. கள்ளவிழ் கோதை - தேன் வழிகின்ற கூந்தலை உடைய வளான கைகேயி. நக்கான் - சிரித்து ; முற்றெச்சம்.

5. ஆன்றவன் - பல குணங்களாலும் நிறைந்தவனுன தசரதன். ஈதி - கொடுப்பாய்.

6. மம்மர் - தடுமாற்றம். பரம் - பாரம் ; சுமை.

7. ஏய - ஏவிய என்பதன் விகாரம்; கொடுத்த என்பது பொருள். தீயவை யாவினும் சிறந்த தீயாள் - எரி, கூற்று, நஞ்சு, பாம்பு முதலிய கொடிய பொருள்கள் எல்லாவற்றினும் கொடிய கைகேயி.

8. துணுக்கம் - நடுக்கம். எய்தா - எய்தி ; அடைந்து. "சோகவிடம் தொடர" என்றது, "உலகத்தில் விடம் கொல்வது, தான் உட்புகுந்த பின்னே ; இந்தச் சோகம் தருகின்ற சொல்லாகிய விடம், தொடர்ந்த அளவி லேயே கொல்லும்" என்னும் வேற்றுமை தோற்று வித்து நின்றது. உருவக அடியாக வந்த வேற்றுமை யணி.

9. வெந்து வெந்து - (மனம்) மிக வெதும்பி ; அடுக்குத் தொடர்.

10. சோரி - குருதி. சலம் - கவலை. அலந் தலையுற்ற - சஞ்சலம் மிக்கன.

11. மேவி - எழுந்து. விம்மும் - புலம்புவான். உயிர்ப்பு-மூச்சு ஓயும் - செயலொடுங்குவான். எற்ற - மோத.

12. பழி - பழிச்சொல். உறும் பழியை, உற்ற பழி என்றது தெளிவு பற்றி வந்த கால வழுவமைதி. நாணுதலாவது தனக்கு ஒவ்வாத இழிந்த செயலில் உள்ளம் ஒடுங்கல். உலாவும் - அலேவான். அயர்க்கும் - சோர்வான். உழைக்கும் - வருந்தும்.

13. கம்பம் - கட்டுத்தறி. களி - மதம். விம்மல் - கலக்கம். உம்பர் - தேவர். அன : 'அன்ன' என்பதன் இடைக் குறை.

14. நஞ்சிலள் - இரங்கவில்லே. தஞ்சு - பற்றுக்கோடு. தக்கோர் - கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் இவற்ருல் தகுதி வாய்ந்த பெரியோர்.

15. எய்த - பொருந்த, (நன்ருய்), புணர்த்த - கற்பித்துச் சொல்லிய.

16. குசை - கடிவாளம். வசைத்திறன் - பழியின் கூறுபாடு.

17. ஏழை - அறிவில்லாதவள் ; கைகேயி.

18. ஆ - அந்தோ! ஆவி காலும் - பெருமூச்சு விடுவான்; காலும் : செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. தளாடி - தள்ளாடி என்பதன் இடைக்குறை; அசைந்து என்பது பொருள். மாகம் - மேலுலகம். நாகம் - கீழ் உலகம். மண் - நடுஉலகம்.

19. கொடு - கொண்டு : இடைக்குறை. பூரியர் எண்ணிடை - கீழ் மக்களின் எண்ணிக்கையில். பொங்கும் - கோபிப் பான்.

20. புடைக்கும் - மோதுவான். விம்மும் - வருந்துவான்.

21. அந்தரம் - தீமை, காவா - காவாமல், இறுப்பினும் - (வரம்) கொடுத்தாலும். போகிலாளே - விலகாதவளே. ஆவது - பொருந்துவது.

22. கோல் - செங்கோல்; உவமை ஆகுபெயர். குறி கொண்டார் போல் - தம் கருத்தைச் செலுத்தியவர் போல. கந்து கொல் யானை - கட்டுத்தறியை முறிக்கின்ற களிறு. களிமன்னர் - செருக்கையுடைய அரசர்.

23. நிலம் - நிலத்தில் உள்ளவர்க்கு இடவாகுபெயர். ஓத உவக்கும் - சொல்ல விரும்புகின்ற.

24. கொள்ளார் - உடன்படார். இசைந்தான் - உடன் பட்டவனாகிய இராமன்.

25. மான்: உவம ஆகுபெயர். பெறுவாயேல் – பெற விரும்புவாயானால். மண்ணே கொள் - உலகை மாத்திரம் பெற்றுக்கொள்; ஏகாரம் - பிரிநிலை. மற்றையது – இராமனைக் காட்டிற்கு அனுப்புதல்: அதனை வாயால் சொல்லவும் அஞ்சி இவ்வாறு தசரதன் கூறினான்.

26. வாய் தந்தேன்-வாயால் கொடுத்துவிட்டேன். நோய்-வருத்தம். நோவன-துன்புறுத்துவன. தந்தீயும்-தரும்.

27. இன்னே இன்னே - இவ்வாறாக: அடுக்குத் தொடர். பன்னி - பலவகையாகச் சொல்லி. தடுமாறுள் - அசையாதவளாய் : முற்றெச்சம். நல்காய் - கொடாமல் : முற்றெச்சம். முனிவாயேல் - வெறுப்பாயானால்.

28. ஆவி புழுங்கா - உயிர் வெதும்பி. அயர்கின்றான்-சோர்கின்றவனாகி. வாய்மொழி - வாய்மை மொழி. பொறை கூர - பொறுமை மிக. நச்சு - நஞ்சு என்பதன் வலித்தல் விகாரம். முச்சு - மூச்சு என்பதன் குறுக்கல் விகாரம்.

29. வயம் - வசம். உரை குன்றேன் - சொன்ன சொல் தவறேன். கண் - கண் போன்றவன். உயிர் - உயிர் போன்றவன். இறவாமை - நீங்காமை. நய - விரும்பி அருள் புரிவாய்.

30. மெய்யே - உண்மை என்னும் அறமே. வேர் - அடி. வினை - செயல். நையா நின்றேன் - வாடுகின்றேன். நளினம் - தாமரை. கழிவானேல் - நீங்குவானானால், உய்யேன் - பிழையேன். அபயம் - அடைக்கலம்.

31. இரந்தான் - வேண்டுகின்ற மன்னன். முனிவு எஞ்சாள் - கோபம் தணியாதவள். வசை - பழி. சரம் - அம்பு. தவிர்க - ஒழிக. உரம் - வலி.

32. கொடியாள் - கொடியவளாகிய கைகேயி. இன்ன - இப்படிப்பட்டவைகளை. வெம் பரல் மொய் கானிடை - வெய்ய பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டில். என்னு - என்று சொல்லி; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இடி ஏறு - பேரிடி. மால்வரை - பெரிய மலை.

33. வீழா - விழுந்து. ஆழா - அழுந்தி. சொற்கொடியாள் - கொடுஞ் சொல்லாள். கொடு - கொண்டு : இடைக் குறை. போழ்ந்தாள் - பிளந்தவள்.

34. ஒன்று நின்ற - உடலோடு பொருந்திநின்ற. கேள்வர் - கணவர். பொன்றுமுன்னம் - இறப்பதற்கு முன்னே. பொன்றினர் - இறந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தானாக, உடனே பெருங்கோப் பெண்டும் உடனிறந்த சிலப்பதிகார வரலாறு ஈண்டு நினைவு கூரற்கு உரியது. இன்றுரர் காறும் - இன்று வரையிலும். ஓர் - அசை. எல் - விளக்கம். இறையோர் - கணவர். கொல்லுதியோ - கொல்லுகிறாயோ.

35. ஏவம் - துன்பம் : எவ்வம் என்பதன் விகாரம். இல் - நற்குடிப்பிறந்த மகளிர் : ஆகுபெயர். ஆ - அந்தோ! நா - நாவிலிருந்து வரும் சொல் : ஆகுபெயர். ஞாலம் - உலகில் உள்ளவர் : ஆகுபெயர்.

36. ஏண் - பெருமை. நாண் - தகாதவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல். மடம் - எல்லாம் அறிந்தும் அறியாதது போல் இருத்தல். அச்சம் - என்றும் காணாதவற்றைக் கண்டவிடத்து அஞ்சுதல். பயிர்ப்பு - தன் கணவன் அல்லாதவர் கை முதலியன மேற்படின் அருவருத்தல். பூண் - அணிகலன். புகழ் பேணி - புகழை விரும்பி. நாண்பால் - நாணின் பகுதி. தம்பால் நணுகார் - தம் முடைய பகுப்பாகிய பெண்பாலார் இனத்தில் சேர மாட்டார். ஆண்பாலரே - ஆண் பாலார் இனத்தில்

சேர்ந்தவரேயாவர். பெண் பாலாரோடு அடைவு - பெண் பாலரோடு வடிவு ஒப்புமைபற்றிச் சேர்வது (எவ்வாறு ?) அம்மா : வியப்பிடைச் சொல்.

37. மண் - உலகம். வலத்தால் - வலியால்; வெற்றியால் எனினும் ஆம். விண்ணோர் - தேவர். அந்தரம் - தீமை; மரணமும் ஆம்.

38. என்று என்று - பலவாருக; அடுக்குத்தொடர். உன்னும் - நினைப்பான். பன்னி - பலபடி சொல்லி. உயிர்க்கும் - பெருமூச்சு எறிவான். இடர் தோயும் - துன்பக் கடலுள் மூழ்குவான். இன்னல் உழக்கும் - துன்பத்தில் வருந்துவான். மயங்கும் - மூர்ச்சிப்பான். இடியும் - உடைவான். குன்று ஒன்று ஒன்ரேடு ஒன்றியது : இல்பொருளுவமை.

39. ஆழி பொன் தேர் - சக்கரத்தைக் கொண்ட பொன் மயமான தேர். அயர்வு - தளர்ச்சி. பூமி - புழுதி. பொன் - அழகிய. ஊழின் பெற்ருல் - முறைமையாகப் பெற்ருல் (நன்று). பாழி - வலிமை. தார் - மாலை. பசை அற்ருள் - அன்பில்லாதவளாகிய கைகேயி. பூழி - புழுதி என்பதன் மரூஉ மொழி. போழ்து - பொழுது என்பதன் மரூஉ மொழி.

40. அரிந்தான் - அறுத்துக்கொடுத்தான். ஓர் மன்னவன் - சிபி என்பான். அருமேனி பெறுவதற்கு அருமையான உடல். வரிந்து - இறுக்கி. ஆர் - கட்டப்பட்ட. பரிந்தால் - வருந்திஞல். பாயும் கனல் - பரவுகின்ற தீ.

41. வீழ்ந்தாளே - (கேட்ட வரத்தை விரைவில் கொடுக்கா விட்டால்) இறந்தவளே யாவாள் : காலவழுவமைதி. வெய்யவள் - கொடியவள். மிடல் - வலிமை. ஈந்தேன் ஈந்தேன் - அடுக்குத்தொடர். வசை வெள்ளம் - பழியாகிய கடல். நீந்தாய் நீந்தாய் - அடுக்கு.

42. கொலைவாள் ஏறு - கொல்லுதல், தொழிலையுடைய சிறந்த வாள். ஆகத்திடை - மனத்தில், தேருன் ஆகி - உணர்வு இல்லாதவனுகி. செய்கை மறந்தான் -

செயலற்றுக் கிடந்தான். ஊருநின்ற சிந்தையினள் - (களிப்பு) மிகுந்து தோன்றுகின்ற மனத்தை உடைய கைகேயி.

43. சேண்உலாவிய நாளெலாம் - மணம் செய்துகொண்டது முதல் வரம் வேண்டிய அன்று வரையிலுமுள்ள நாட்களை. உயிர் ஒன்று போல்வன - 'மன்னனுக்கும், கைகேயிக்கும் உடல் வேறு உயிர் ஒன்றே' என்று சொல்லுமாறு இருவரும் மனமொத்து ஒருவரே நினைந்து செய்தாற் போன்ற செயல்கள். ஏண் உலாவிய - வலிமை பொருந்திய. ஒன்றும் - சிறிதும்: இழிவு சிறப்பும்மை: வாள் - ஒளி. நளிர் கங்குல் - குளிர்ந்த இரவு.

44. எண்தரும் - எண்ணப்படுகின்ற. கடைசென்ற யாமம் - இறுதியாய் வந்த யாமத்தில். ஏழையால் - அறிவும் இரக்கமும் இல்லாத கைகேயியால். தொங்கல் - மாலை. காமர் துணை கரம் - அழகிய இரண்டு கைகள். எற்றி எற்றி - பலமுறை அடித்துக்கொண்டு; அடுக்கு. விளிப்ப போன்ற - அழுவன ஒத்தன இப்பாட்டில் தற்குறிப்பேற்ற அணி வந்துள்ளது.

45. கயம் - குளம். புள் - பறவை. தேய்கை - தேய்தல். ஒத்த - பொருந்திய. மருங்குல் - இடை. சிலம்பின் நின்று சிலம்புவ - காற் சிலம்பொலி போலிருந்து ஒலிப்பவை. விடத்தை - நஞ்சு போன்றவளாகிய கைகேயியை. கயத்தியை - கீழ்மையையுடையவளை. பொழுது விடிகையில் பறவைகள் ஒலிப்பது, கைகேயி செய்த கொடுஞ் செயலைக் கண்டு தம் மனத்தினுள் அவை வைவது போலும் என்று புனைந்துரைக்கப் பட்டுள்ள இப்பாட்டிலும் தற்குறிப்பேற்ற அணி வந்துள்ளதைக் காண்க.

46. சேமம் - கட்டுமிடங்கள். வாமம் - அழகு. மேகலை - இடையில் அணியும் அணி. இறத்தும் - விட்டுச் செல்வோம். இச் செய்யுளிலும் தற்குறிப்பேற்ற அணி காண்க.

47. சிரித்த பங்கயம் - மலர்ந்த தாமரைப்பூ. கரிக்கரம் - யானையின் துதிக்கை. வரித்த தண்கதிர் முத்து - கட்டின குளிர்ந்த ஒளிக்கதிர்களை உடைய முத்துக்கள். மீன் - விண்மீன்கள்; நட்சத்திரங்கள். இச் செய்யுளிலும் தற்குறிப்பேற்ற அணி காண்க.

48. சாய் - மென்மை; அடங்க - அழிய. தயங்கு - விளங்குகின்ற. தீ அடங்கிய - கொடுமை பொருந்திய. சீரிய - நற்குணங்கள் பொருந்திய. குமுதம் - ஆம்பல் மலர்: ஆகுபெயர்: இச்செய்யுளில் உவமை அணி காண்க.

49. வையம் - உலகம். நையநைய - மிகவும்வருந்த - அடுக்குத்தொடர். நல் - சிறந்த. அவிந்து - அழிந்து. அடங்கி - அமைந்து. நடுங்குவான் - பதறுகின்ற அரசன். வினையாலணையும் பெயர். படைத்த - தோற்றுவித்த; சேய் ஒளிபோல் - செவ்விய ஒளி குறைதல் போல.

50. வங்கியம் - இசைக்குழல்கள். தேன் விளம்பின - தேன் என்னும் இன்னிசை வண்டுகள் போல் ஒலித்தன. தேனைப்போல இனிமையாக ஒலித்தன என்றுமாம். வாணி - வாழ்த்துச் சொற்கள். முந்தின - மிகுந்தன. பாணியின் பங்கி - பாட்டுக்களின் வகைகள். அம்பரம் - வானம். பம்மின - மிக்கொலித்தன. கறங்கின - ஒலித்தன. நூபுரங்கள் - காற்சிலம்புகள்.

51. தூபம் முற்றிய - புகைபோல் (கரிதாக) முதிர்ந்த. கார் இருள் பகை - கரிய இருளாகிய பகை. நீர்த்தகன்றென: நீர்மை (ஒளி) மழுங்கிட. சேயது - மகனுடைய. வெய்யவன் - சூரியன். குணக்குன்று - உதயகிரி. இச் செய்யுளிலும் தற்குறிப்பேற்ற அணி காண்க.

52. ஒத்து - வேதம். மெய்ம்மை - உண்மையாகிய புகழ். சிற்றவை - சிறிய தாய். கோயில் - மாளிகை.

53. ஏய்ந்த - (சூரியனைத்) தொடங்கி வருவதான. விழுமிது - சிறந்தது.

54. ஆயன - அப்படிப்பட்டவை. அயர்ந்து - மூர்ச்சை அடைந்து. சூழல் - இடம். துருவினன் - தேடி; முற்றெச்சம். என்ற - என்று. 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

55. உந்தை - உன் அப்பன். எந்தை - என் அப்பன். தந்தை - தன் அப்பன்.

56. தலை நின்றேன் - தலைமேற்கொண்டு நின்றேன். உளரே - உண்டோ. ஓகாரங்கள் எதிர்மறை. எந்தையே, நீரே. ஏகாரங்கள் பிரிநிலை.

57. பூமி - புழுதி. ஆடி - நீராடி.

58. செவ்வி - அழகு. வாசகம் - உரை. அம்மா - வியப்பிடைச் சொல்.

59. தெருள் - அறிவின் தெளிவு. திறம்ப - பிறழ்வதற்கு. இருள் - மயக்கம். தாங்கும் - காக்கும். இப்பாடலில் உவமை அணி அமைந்திருத்தலைக் காண்க.

60. மின் ஒளிர் கானம் - மின்னல் போல வெயில் விளங்கும் காடு.

4. திருவிளையாடற் புராணம்

1. மாறன் - பாண்டியன். அன்னம் - அன்ன வடிவுடன் முயன்ற திருமால். நந்தனம் - நந்தவனம்.

2. தடம் - பெரிய. வீ - வண்டு. கரவீரம் - அலரி. போது அவிழ் - போது மலர்கின்ற. நந்தி - நந்தியாவட்டம்.

3. முரன்றிட - ஒலித்திட.

4. பைத்து - பசுமை உடையதாய். கான்று - வெளிப் படுத்தி, பரப்பி. பரி - குதிரை.

5. தொங்கல் - மாலை. இண்டை, தாமம், கண்ணி - மாலை வகைகள். வணங்கார் ஊர் கருக்கிய - பகைவரின் திரி புரங்களை எரித்த.

6. நிம்பம் - வேம்பு.

7. மன்னி - நிலைபெற்று.

8. நண்பக மாறு - நண்பு அகம் மாறு - உள்ளத்தே அன்பு மாறுத. பண்பகர் சொல்லார் - பண்போல் பேசும் சொல்லினிராகிய மகளிர். தம்புடை - தம்மிடத்தே. மாரன் - காமன். எண் - எள். பக - பிளக்குமாறு ஆகிய - ஆக - ஆகும்பொருட்டு. வந்தன்று - வந்தது.

9. கால் - காற்று. துனி - துன்பம். தவிர் - நீக்கும். தென்றலும் தன் வெப்பம் தீர வேறு இளங்காற்றைத் தேடும்படியான காலம் என்றவாறு.

10. அண்ட வான் தரு - விண்ணில் உள்ள கற்பக மரம். இறை கொள்ள - வந்து தங்கியிருக்க. தைவர - தடவ. காசு - நீலமணி.

11. மங்குல் ஊர் செல்வன் - மேகம் ஊரும் இந்திரன். புங்கவன் - தேவன்.

13. அளி - வண்டு. தம்பால் இல்லென்று - தம்மிடம் பொருள் இல்லையென்று கூறி. அலந்தவர்க்கு - வருந்தி வந்தவர்க்கு, வறியவர்க்கு.

14. குயில் கூவும் இளவேனிலில் மயில்கள் ஆடாமல் ஒடுங்கியிருத்தல் இயற்கை.

15. கலைகள் தேரும் - கலைகளைக் கற்று ஆராயும்.

16. காமரம் - இசைப்பாட்டு. முள்வாய் கைதை - முட்களை உடைய தாழை. வாள் எடுப்ப - வாள் போல் மலர.

17. கைவினை - சிற்பக் கலை. வெவ்விய - வெப்பமான. வேடை - வெப்பம். நீப்பான் - போக்கிக் கொள்ள.

18. தளவு - முல்லை. வசந்தம் - இளவேனில்.

19. காவில் - சோலையில். வௌவிய - எடுத்துக்கொண்டு வந்த. காலுக்கும் - அந்தத் தென்றற் காற்றுக்கும்.

20. பித்தை - கூந்தல். இறும்பூது - வியப்பு.

21. முன்னு - முன்னுகை, முன்னே. தூக்கினர் - தொங்க விட்டனர்.

22. துங்கத் தார் வேம்பன் - தூய வேம்பை மாலையாக உடையவன். துங்கம் - தூய்மை, உயர்வு. பங்கத்தா ராகி - சிறுமை உற்றவராகி.

23. ஆச்சிமம் - ஆச்சிரமம். முந்தை ஆச்சிமம் - முதல் ஆச்சிரமமாகிய பிரம்மச்சரியம்.

24. நாலுரு - பிரமன், திருமால், உருத்திரன், மகேசன். நால் அருவம் - விந்து, நாதம், சத்தி, சிவம். கலி - துன்பம். வெருவ - அஞ்சி நீங்க.

25. செல்லல் - துன்பம்.

26. அருகன் - உரிமை உடையவன்.

27. அறிதி - அறிவாய். வையை நாடவன் – பாண்டியன்.

28. 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்குவது அப் பாட்டு. இறைஞ்சி - வணங்கி.

30. வல்லே - விரைவில். வாசியா - வாசித்து. தூக்கி - சீர் தூக்கி. துளக்கி - அசைத்து.

31. மீனவன் - மீன் கொடியோஙகிய பாண்டியன். அளக் கில் - அளவு இல்லாத.

32. ஒல்லே - விரைவில். மணந்த - மணமுள்ள.

33. விபுதர் - புலவர்.

35. வைகிடத்து - இருக்குமிடத்தில்.

36. பையுள் - துன்பம். வழுவு - குற்றமுள்ள.

37. கறை கெழு மிடறு - நஞ்சு உண்ட கறை பொருந்திய கண்டம்.

40. மெய்ப்பை - ஒருவகை உடை.

42. ஆரவை - நிறைந்த சபை. என்னுமுன்னம் - என்பதற்கு முன்பே. கிளத்தினேன் - சொன்னேன்.

43. பொற்குற்ற - பொன்னைப் போன்ற. அற்குற்ற - அல் லுக்கு உற்ற - இருள் போன்ற. குழற்கு - கூந்தலுக்கு.

44. பதுமினி - திருமகள். செய்கைத்து - செயற்கைத் தன்மை உடையது.

45. இரவின் - இரவுபோல் இருண்ட. வெருவிலான் - அஞ் சாதவன். சலம் - பொய்.

46. உம்பரார்பதி - இந்திரன். ஆகம் - உடல்.

47. இம்மென - விரைவில். கரந்தான் - ஒளித்தான்.

77162

5. பாரதியார் பாடல்

கண்ணன் என் - சேவகன்

8. தாயாதி — பங்காளிகள்.

9. ஊரம்பலம் — ஊர்ப் பொதுவிடம்.

25. கோல் அடி — சிலம்புப் போர்.

31. விருது — பட்டம், பெருமை.

35. திரை — தோலிற் சுருக்கம்.

46. வண்ணமுற — சிறப்பாக.

48. தாதியர் — வேலைக்காரிகள்.

58. விசாரம் — கவலை, துன்பம்.

---

6. அழகின் சிரிப்பு

1. கடல்

1. பூரிப்பு — மனமகிழ்ச்சி.
3. முகக்கும் — பருகும்.
4. புனல் — நீர்.
5. செங்கதிர் — கதிரவன்.
6. முகில்கள் — மேகங்கள்.
7. புட்கள் — பறவைகள்.
9. தணல் — நெருப்பு.
10. மன்னியே — நிலைபெற்றே.

2. ஞாயிறு

1. கனல் — நெருப்பு. திரை — அலை.
2. வண்ணம் — நிறம்.
3. பிடர்மயிர் — பிடரிமயிர். தகளி — அகல்.
4. பொய்கை — குளம்.
5. நளிர் கடல் — குளிர்ச்சி பொருந்திய கடல்.
6. இலகிய — விளங்கிய.
7. வெய்யோன் — விரும்புகின்றவன்; சூரியன்.
9. உடுக்கள் — நட்சத்திரங்கள்.
   பைங்கூழ் — பசிய பயிர்கள்.
10. தழல் — நெருப்பு.